158

# மாவலி




தொழிலாளர் தேசிய சங்க வெளியீடு

ஊற்று; 1 மார்ச் - 1974 ஓடை :8


"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

— பாரதி.

# ஒரு நாளைக்கு ஆறு மணி நேர வேலை

ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்ததும் தொழில் விசாரணைக் கமிசனை ஏற்படுத்தியது. இக்கமிசனுக்கு தொழிலாளர் தேசிய சங்கம் சமர்ப்பித்த மகஜரில் இரண்டு முக்கிய விசயங்களைக் குறிப்பிட்டது. அஃதாவது தோட்டத் தொழிலாளிக்கு மாதச்சம்பளம் வழங்கவேண்டும். இந்தக் கோரிக்கையை வலியுறுத்து முகமாக தொழிலாளர் தேசிய சங்கம் கூறியதாவது "எல்லாத்துறைகளிலும் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வேலை செய்வதற்கும், மாதச்சம்பளம் பெறுவதற்கும் நேரடி நடவடிக்கை எடுக்க உரிமையுண்டு. ஆனல் நாட்டின் வருமானத்தில் 65 சதவீதத்தை சம்பாதித்துக் கொடுக்கும் இவர்களுக்கு வேலை செய்யும் உரிமை பறிமுதல் செய்யப்பட்டதால் அவர்கள் பசி பட்டினியிலிருந்து தப்பமுடியாமல் தவிக்கிருர்கள். அதோடு சம்பள முறை மோசமான படியால் வீட்டுத்தலைவன். என்ற முறையில் அவனுக்கு சம்பாத்தியமில்லை. குடும்பத்திலுள்ள அனைவரும் வேலை செய்தால் மாத்திரம் அவர்கள் உயிர் வாழ முடியும். தோட்டத் தொழிலாளர்களினது அதிமுக்கியமான பிரச்சினைகளில் மாதச்சம்பளம் முக்கியமானதால், தொழிலாளர் தேசிய சங்கம் ஆரம்பகால முதல் மாதச்சம்பளம் கொடுக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வந்துள்ளது.

எனவே தோட்டத் தொழில் சட்டம் அதிகாரம் 112ல் மாதச் சம்பளம் தொழிலாளிக்கு கொடுப்பதற்கான கரு அதில் அமைந்துள்ளது. இதில் நாட் சம்பளத்தை வேலை செய்த நாட்களுக்கும், வேலை செய்வதற்கு சித்தமாயிருந்த நாட்களுக்கும், வேலை கேட்ட நாட்களுக்கும் சம்பளம் கொடுக்க வேண்டும். முதலாளிக்கு அப்படி வேலை கொடுக்க வசதி இருந்தாலும் இல்லாவிட்டாலும் வாரத்தில் 6 நாள் வேலை கொடுக்க வேண்டும் என்பதே சட்டம். கடந்த நாலு வருடங்களாக தொழிலா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிக்கு மாதச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை முக்கியத்துவம் அடைந்தது மாத்திரமல்ல, மாதச் சம்பளமில்லாது தொழிலாளர் உயிர் வாழ முடியாத நிலை வந்துவிட்டது.

நாள் சம்பளத்தில் 10% கூட்டியதின் மூலம் தொழிலாளியின் அவல நிலை மாறப் போவதில்லை. இந்த 10% சம்பளக் கூட்டலின் மூலம் வரும் நன்மையை தோட்ட முதலாளிமார் மாதத்தில் நாலு நாட்களுக்கு வேலை நிறுத்தினால் அதன் பயன் சிதைந்து போய்விடும். இதற்குப் பரிகாரம் மாதச் சம்பளமே தான்.

இந்த மகஜரில் தொழிலாளர்களுக்கு வாரத்தில் 36மணி நேர வேலை கொடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியது. பொதுவாக தேயிலைத் தோட்டங்களில் ஆண் தொழிலாளர்கள் கணக்கு வேலைகளை முடித்துக் கொண்டு வீடு திரும்புகின்றனர்கள். இந்த கணக்கு வேலையை முடிப்பதற்கு கூடியது 6மணி நேரம்தான் செல்கின்றது. ஆனால் கொழுந்தெடுக்கும் பெண் தொழிலாளர்கள் 9 மணி நேரத்துக்கு மேல் வேலை செய்கின்றனர்கள். மேலதிகமாக வேலை செய்யும் நேரத்திற்கு மணிக்காசு கொடுப்பதில்லை. ஆனால் ஒரு இறுத்தலுக்கு 6 சதம் மட்டுமே கொடுக்கப்படுகிறது. எனவே பெண் தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 9 மணிக்கு மேலும், வாரத்தில் 70 மணி நேர மும்வேலை செய்கின்றனர்கள். ஆனால் ரப்பர் தோட்டத்தில் ஆண், பெண் தொழிலாளர்கள் 6 மணி நேரந்தான் வேலை செய்கின்றனர்கள்.

பொதுவாக கொழுந்தெடுக்கிறவர்கள் தாய்மார்கள். பிள்ளை வளர்ப்பு, குடும்ப பரிபாலனம், சமையல் ஆகிய பெரும் பாரங்கள் இவர்கள் தலையில் சுமத்தப்பட்டுள்ளது. இதனால் ஏற்படும் கஸ்டங்களால் பெண்கள் சீக்கிரத்தில் இறந்துபட்டுப்போகின்றனர். இவர்களுடைய சாக்காடு நாட்டின் ஏனைய பகுதியை விட அதிகமாகும். எனவே தேயிலை தோட்ட வேலையை 6மணி நேரமாகக் குறைக்க வேண்டும். காலை 8 மணிக்கு ஆரம்பமாகி மாலை 2 மணிக்கு முடிய வேண்டும். இந்தக் கோரிக்கையின் முக்கியத்துவம் முன்னைவிட இப்போது அதிமுக்கியமாகிவிட்டது. இது உடன் அமுலுக்கு வந்தால் தான் பட்டினியால் வாடி வதங்கி உயிரை விட்டுக் கொண்டிருக்கும் தொழிலாளிக்கு மூச்சு விட அவகாசம் கிடைக்கும்.

ஒரு நாளைக்கு 12 அவுன்ஸ் உணவைச் சாப்பிட்டுக் கொண்டு உயிர் வாழும் தொழிலாளி வியாதி வந்ததும் அதைச் சமாளிக்க முடியாமல் சாக வேண்டிய நிலைமை மலைநாட்டில் பரவி வருகின்றது. இந்த மோசமான நிலைமையை தோட்டத் துரைமாரும், சர்க்காரும் கவனியாது பாராமுகமாக இராது உடனடியாக மாதச் சம்பளமும், வாரத்திற்கு 36 மணி நேர வேலையுமாகக் குறைக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட இரு கோரிக்கைகளையும் அமுல் நடத்த தொழிலாளர் தேசிய சங்கம் தொழில் கமிசனுக்கு கொண்டுவந்துள்ளது.

---

***(மாவலியில் வெளிவரும் மதிப்புரைகள் கதை, கட்டுரை, கவிதைகள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது தலைவர் அய்யாத்துரை அவர்கள் பத்துச்சதவீத சம்பள உயர்வு பற்றி பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை.

ஏப்ரல் முதல் அரசாங்கக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு 20 சதவீத சம்பள உயர்வும், தோட்டத்தொழிலாளர்களுக்கு 10 சதவீத சம்பள உயர்வும் வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது என நிதி அமைச்சர் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் இச் செயலைப் பாராட்டும் அதே வேளையில் கீழ்கண்டவற்றை நாம் வலியுறுத்த விரும்புகிறோம்.

இச் சம்பள உயர்வின் மூலம் நன்மையடையப் போகின்றவர்கள் மாதச் சம்பளம் பெறுபவர்கள்தான். நாட் சம்பளம் பெறும் தொழிலாளர்களுக்கு இது எவ்வித மகிழ்ச்சியையும் அளிக்காது. இச் சம்பள உயர்வு மட்டுமின்றி தோட்டத் தொழிலாளர்கள் நாட் சம்பளத்தில் ஏற்கனவே அளிக்கப்பட்ட உயர்வும் அவர்களுக்குக் கிடைக்காதவாறு தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களின் வேலை நாட்களைக் குறைக்கின்றன. மாதத்தில் நான்கு நாட்கள் வேலையை முதலாளிமார் குறைத்தால் இந்த 20 சதவீத சம்பள உயர்வு சூன்யமாகி விடும். எனவே நாட் சம்பளத்தில் உயர்வு அளிக்கப்பட்டாலும் கூட அது தொழிலாளர்களுக்கு நன்மை பயக்காது. இதற்கு கடந்த காலத்தில் முதலாளிமார்களின் செய்கை சாட்சி.

1973 ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 10 சதவீத உயர்வு தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது. புல்வெட்டு கொந்தரப்பு வேலை செய்வோருக்கு இந்த 10 சதவீத சம்பள உயர்வு கிட்டவில்லை. எனவே இச் சம்பள உயர்வை தொழிலாளர்கள் அனுபவிக்க வேண்டுமானுல் மாதத்தில் 26 நாள் வேலை ஒவ்வொரு தொழிலாளர்களுக்கும் கிடைக்கக் கூடிய நிலையை உருவாக்க வேண்டும். அதை ஒழுங்காக அமுல் நடத்த முன்வராத வரை தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தில் உயர்வு பெற முடியாது.

நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியில் பாதிக்கப்பட்டுள்ளவர்களில், மோசமான நிலையில் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் தோட்டத் தொழிலாளர்கள் தான் என்பது சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை. இந்த நிலையில் இவர்களுக்கு ஆட்சியாளர்கள் உண்மையாக உதவ வேண்டும் என்ருல் அது மாதச் சம்பளம் வழங்குவதொன்ருகத் தான் இருக்க முடியும். வறுமை நீங்க வாழ வழியும் தோன்றும். அதை அரசாங்கம் செய்யாமல் தொழிற்சங்கக் கோரிக்கைகளையும் நிறைவேற்ருமல் நாட்களைக் கடத்திக் கொண்டு கஷ்டமும், நஷ்டமும் அதிகரித்தும் மாதச்சம்பள விடயத்தை ஒதுக்கி வைத்து விட்டு நாட் சம்பளத்தில் 10 சதவீத உயர்வு வழங்கியிருப்பது எந்த வகையிலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு நன்மையில்லை என்பதை அறிவுறுத்துகின்ருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் இதழ் தொடர்ச்சி

## இலங்கைத் தொழில் துறைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்யப்படுவது சம்பந்தமான சட்டங்களை ஆராயும் கட்டுரை

கட்டுரை ஆசிரியர் :—

**ஆர். தியாகராஜா**

உதவி தொழில் கமிசனர்

தமிழாக்கம் பி. வி. கந்தையா

### ஒரு தொழிலாளி நடத்தை, ஒழுங்கு ஆகியவை காரணமாக வேலை நீக்கம் செய்வது

சேவை உடன் படிக்கை சட்டத்தில் 4 (3) பிரிவில் ஒரு தொழிலாளியை அவரின் ஒழுங்கீனம் காரணமாக உடனடியாக வேலை நீக்கம் செய்ய இடமளிக்கப்பட்டுள்ளது. ஒழுங்கீனம் காரணமாக ஒரு தொழிலாளியை உடனடியாக வேலை நீக்கம் செய்யும் உரிமை முதலாளிக்கு உண்டு என்பதை நீதி மன்றங்களும் அங்கீகரித்துள்ளன. ஒரு தொழிலாளியை அவரின் ஒழுங்கீனம் காரணமாக வேலை நீக்கம் செய்வதற்கான காரணங்கள், வழி முறைகள் சட்டத்தில் இல்லை. ஆனால் சில கூட்டு ஒப்பந்தங்கள் இதற்கு இடமளித்திருக்கின்றது. இப்படிப் பட்டவைகளில் 1971ம் ஆண்டு 3ம் நம்பர் கூட்டு ஒப்பந்தம் 25ம் சரத்து ஒன்று.

### வேலைக்கு தேவையானவர்களை வைத்து கொள்ளும் முறையில் வேலை நீக்கம் செய்தல்.

கைத்தொழில் சட்டத்தின் 4ம் (பி) பகுதி ஆட்கழிப்பு திட்டத்திற்கு இடமளித்திருக்கின்றது. இச் சட்டம் 15 தொழிலாளர்களுக்கு குறைவில்லாமல் வேலைக்கு இருக்கும் ஒரு தொழில் ஸ்தாபனத்திற்கே சாரும். இச் சட்டத்தின் கீழ் ஆட்கழிப்புக்கான காரணத்தை காட்டி தொழில் கமிசனருக்கு இரண்டு மாத நோட்டீஸ் (அறிவித்தல்) கொடுக்க வேண்டும். இந்த இரண்டு மாத காலத்தவணையில் இப்பிரச்சனைக்கு சட்ட மூலம் பரிகாரம் தேட தொழில் கோர்ட்டுக்கோ, மத்தியஸ்தர் கோர்ட்டுக்கோ பாரப்படுத்தினல் ஆட்கழிப்புக்கான நோக்கத்தை முதலாளி மேலும் இரண்டு மாதங்களுக்குத் தள்ளிப் போட வேண்டும். இந்த இரண்டு மாதக் காலத்துக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் கோர்ட்டு அல்லது மத்தியஸ்தர் கோட்டு தீர்ப்பை வழங்க வேண்டும்.

1971ம் ஆண்டு அரசு தொழிலாளர் வேலை நீக்கச் சட்டம் (விசேச சரத்து) கொண்டு வந்தது. ஸ்ர் 45-1971. தொழிலாளர்களை தன்னிச்சையாக திடீரென வேலை நீக்கம் செய்வது, மூலப் பொருள் இல்லை என்றும் அதனல் தொழில் நஷ்டம் வியாபாரத்தில் நஷ்டம் என்ற பல காரணங்களைக் காட்டி வேலை நீக்கம் செய்வதை தடை செய்வதற்காகவே இச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அட்டவணையில் அடங்கிய தொழிலில் வேலை செய்யும் ஒரு தொழிலாளியை அவரின் நடத்தையின் காரணத்திற்காக அல்லது வேறு காரணங்களுக்காக வேலை நீக்கம் செய்வதை இச் சட்டம் தடை செய்கிறது. இச் சட்டம் ஒரு தொழிலை தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ மூடி அதனல் பாதிக்கப்படும் தொழிலாளர்களையும் உள்ளடக்கும் இச்சட்டம் அட்டவணையில் அடங்கிய தொழில் சம்பந்தப்பட்ட வகையில் கைத்தொழில் சட்டம் 4 (பி) பகுதியின் அந்தஸ்த்தை குறைக்கின்றது. (ஆதிக்கம் செலுத்துகின்றது என்றும் சொல்லலாம்).

இச் சட்டத்தின் மூலம் தொழில் கமிசனர் உத்தரவின்றி எந்த ஒரு தொழிலாளியையும் வேலை நீக்கம் செய்ய முடியாது. தொழில் கமிசனரின் அனுமதியின்றி ஒரு தொழிலாளியை வேல நீக்கம் செய்தால் அத்தொழிலாளிக்கு வேலை நீக்கக் காலத்துக்குரிய சம்பளமும் ஏனைய நன்மைகளையும் கொடுத்து மீண்டும் வேலைக்கு வைத்து கொள்ள வேண்டுமென முதலாளிக்கு உத்தரவிட கமிசனருக்கு அதிகாரம் உண்டு. இச் சட்டத்தால் சில குறிப்பிட்ட வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நன்மை கிடைக்கிறது. (சரத்து 3(1))

## ஓய்வு காலம்

ஓய்வு பெறும் வயது சட்டத்தில் நிர்ணயிக்கப்பட வில்லை. ஆனல் சில தொழிற்துறைகளின் கூட்டு ஒப்பந்தங்களின் மூலமாகவும் இரு சாரார்களுக்கு மிடையில் ஏற்பட்டுள்ள தனிப்பட்ட ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு பெறும் வயது எது என்பதை தீர்மானிக்கப்பட்டுள்ளது. மற்ற எல்லாத் துறைகளிலும் ஓய்வு பெறும் வயது நடைமுறைப் பழக்கத்தில் அனுஷ்டிக்கப்படுவதும் தொழில் நீதி மன்ற தீர்ப்புகளின் அடிப்படையிலுமே தீர்மானிக்கப்படுகிறது ஒரு தொழிலாளி ஓய்வு பெற வேண்டும் என்ருலோ. அல்லது ஓய்வு பெறும் வயதை எய்தியவுடன் வேலை நீக்கம் செய்ய வேண்டும் என்ருலோ வேலை நீக்க (விசேச சரத்து) சட்டத்தின் மூலம் தொழில் கமிசனரின் அனுமதியைப் பெறவேண்டும்.

## வேலையிலிருந்து தாங்களே விலகிக் கொள்ளல்

ஒரு தொழிலாளி ஒரு மாத காலத்துக்கு மேல் வேலைக்கு வராது இருந்தாலோ அல்லது வேலைக்கு வராததின் தக்க காரணத்தை காட்டாவிட்டாலோ, அல்லது வேலை ஒப்பந்த அடிப்படைக்கு

கூடுதலான நாட்கள் வேலைக்கு வராமலிருந்தாலோ அவர் தானே வேலையை விட்டு விலகி கொண்டவராவார்.

பொது பாது காப்புச் சட்டத்தின் கீழ் அவசர காலச்சட்டத்தை அரசு பிரகடனப்படுத்தும்போது, மக்களின் வாழ்க்கைக்கு அவசியமானதென நினைக்கும் தொழில்களை அத்தியாவசிய சேவையென பிரகடனப் படுத்துகின்றது. இந்த அவசர காலச்சட்டத்தின் கீழ் அத்தியாவசிய சேவையில் ஈடுபட்டுள்ள ஒரு தொழிலாளி வேலைக்கு வர மறுத்தாலோ, அல்லது வேலை ஸ்தலத்தில் வேலை செய்ய மறுத்தாலோ அவர் தானே வேலையை விட்டுவிலகிக் கொண்டவர் ஆவார்.

அவசரக் காலச் சட்டம் தொழிலாளியை வேலைக்குச் செல்ல வேண்டுமென கட்டுப்படுத்தாதென இலங்கை வர்த்தகச் சங்கம் டைம்ஸ் நிறுவனத்திற் கெதிராக தாக்கல் செய்த வழக்கொன்றை அண்மையில் உயர் நீதி மன்றம் தள்ளுபடி செய்தது.

(வளரும்)

# இந்தியா செல்வோர் மாவட்ட ஆஸ்பத்திரிகளில் "கலரா தடுப்பு" ஊசி போட்டுக் கொள்ளலாம்.

ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா செல்கிறவர்கள் பல மைல் தூரம் சென்று காலரா தடுப்பு ஊசி போட வேண்டுமென்றும், சிலசமயங்களில் மன்னாரில் பல நாட்கள் தடுப்பு ஊசிக்காக காத்திருக்க வேண்டி ஏற்படுகின்றதென்றும், ஆகவே எல்லா மாவட்ட வைத்திய சாலைகளுக்கும் தடுப்பு ஊசி மருந்து அனுப்பி இந்தியா செல்கிறவர்களின் சிரமத்தைப் போக்க வேண்டுமெனவும் நமது பொதுச் செயலாளர் திரு பி.வி கந்தையா தலைமைச் சுகாதார அதிகாரிக்கும், சுகாதார அமைச்சருக்கும் எழுதினர்.

நமது வேண்டுகோளுக்கு செவிசாய்த்த அதிகாரி காலரா தடுப்பு ஊசி இப்போது எல்லா மாவட்ட வைத்திய சாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளதென்றும், இந்தியா செல்லும் தொழிலாளர்கள் அந்தப் பகுதி மாவட்ட வைத்தியசாலைகளில் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளலாமென்றும் பதில் எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கச் செய்திகள்

தொகுப்பு: எல். ஸ்ரீகாந்த்

## தொழில் கோட்டில் வெற்றிகள்!

**மாத்தளை - எல்கடுவ**

மாத்தளை மாவட்ட எல்கடுவ கப்புவத்தை டிவிசனைச் சார்ந்த தொழிலாளி திரு. கருப்பையாவின் மனைவி மூக்காய் என்பவருக்கு தோட்ட நிர்வாகம் கொடுக்க மறுத்த சேவைக் காலப் பணத்தைப் பெற நமது சங்கம் கண்டி தொழில் கோட்டின் மூலம் எடுத்த வழக்கு கடந்த 12 - 3- 74 ல் விசாரணைக்கு வந்தது. தொழில் கோட்டு ஆணையாளர் கருப்பாயிக்கு 660/- சேவைக் காலப்பணமாக தோட்ட நிர்வாகம் 31 -5 -74 க்கு முன் பாக வழங்க வேண்டுமெனத் தீர்ப்பளித்துள்ளார். நமது சங்கத்தின் சார்பில் கண்டி மானிலச் செயலாளர் திரு. எஸ். ஓ இரட்ணராஜ் பேசினார்.

**நாளந்தை**

நாளந்த தோட்ட நிர்வாகம் திரு. பி. பொன்னையா என் பவருக்கு கொடுக்க மறுத்த பென்சன் பண விசயமாக நமது சங்கம் தொழில் கோட்டில் முறையிட்டதின் பலனாக, அவருக்கு கண்டி தொழில் கோடு ரூபாய் 525/- கொடுக்கும்படியாக கடந்த 12- 3- 74 ல் தீர்ப்பளிதத்து. இப்பணம் உரியவருக்கு 30- 6- 74க்கு முன் கொடுக்கப்பட வேண்டும்.

**வட்டவளை - சென் எலியாஸ்**

வட்டவளை, சென் எலியாஸ் தோட்டத் தொழிலாளி உமையாள் சார்பாக எமது சங்கம் அட்டன் தொழில் கோட்டில் தாக்கல் செய்திருந்த வழக்கு கடந்த 7- 2- 74 ல் தீர்ப்புக்கு வந்தது. மேற்படி தொழிலாளிக்கு தோட்ட நிர்வாகம் 615/- வழங்க வேண்டுமென தீர்ப்பு வழங்கியது.

இதே தோட்டத்தைச் சேர்ந்த திரு. வி. சுப்பரமணியத்தின் தொழில் கோட்டு வழக்கும் கடந்த 18- 2- 74 ல் தீர்ப்புக்கு வந்த போது அவருக்கும் ரூ 402 - 50 நட்டஈடாக வழங்க வேண்டுமென தொழில் கோடு ஆணையிட்டுள்ளது. இந்த இரண்டு கேஸ்களையும் நமது அரசியல் காரியதரிசி திரு. பி. பெருமாள் நடத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பன்விலை - ரக்சாவ**

காணி அமைச்சு சுவீகரித்த ரக்சாவ தோட்டத் தொழிலாளர்களுக்கு நஸ்ட ஈடும், சேவைகாலப் பணமும் கொடுக்க வேண்டுமென தொ தே. சங்கம் எடுத்துக்கொண்ட இடைவிடா முயற்சியால் மேற்படி தோட்டத்தில் இருந்து இந்தியா செல்பவர்களுக்கு, சேவைகாலப் பணம் வழங்க வேண்டுமென கண்டி உதவி தொழில் கமிசனர் இப்போது தோட்டத்தை நடத்தும் உசவச அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார். இவ்வழக்கை நமது கண்டி மாநிலச் செயலாளர் திரு. எஸ். ஓ. ரட்ணராஜ் நடத்தினர்.

| | |
|---|---|
| அழகன் | 1190 - 00 |
| சுந்தரி | 450 - 00 |
| ஏ. மனோன்மணி | 60 - 00 |
| ஏ. பொன்னுத்துரை | 420 - 00 |
| பழனியாண்டி | 490 - 00 |
| ஏ. பவளக்கொடி | 390 - 00 |
| அந்தோனிமுத்து | 700 - 00 |
| எ. மாரியம்மா | 240 - 00 |
| எ. சவரிமுத்து | 350 - 00 |
| எஸ். சவரியம்மா | 120 - 00 |
| பெருமாள் | 87 - 00 |
| சின்னம்மா | 75 - 00 |
| காமாட்சி | 75 - 00 |
| ராமாயி | 75 - 00 |
| முத்துசாமி | 525 - 00 |
| மாரியம்மா | 570 - 00 |
| விசாலாட்சி | 105 - 00 |
| பத்துமா | 45 - 00 |
| மொத்தம் | 5967 - 00 |

## பலன் தந்த பேச்சு வார்த்தை

முற்போக்கு தோட்டப்புற தொழிற்சங்க ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் தொழில் சங்கங்களுக்கும். தோட்டத்துரைமார் சம்மேளனத்திற்கும் இடையில் கடந்த 8-3-74 ல் நடந்த பேச்சு வார்த்தையில் கீழ்கண்ட விசயங்கள் முடிவு செய்யப்பட்டன.

(அ) தோட்டத் தொழிலாளர்களுக்கு வாரா வாரம் உப உணவுப் பொருட்கள் வாங்குவதற்கு முன்பணம் கொடுக்க வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் வற்புறுத்தியதற்கு முதலாளிமார் சம்மேளனம், மாதம் இருமுறை, அதாவது 20 - 30 ம் திகதிகளில் முன்பணம் கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) சம்பளத்தில் 10 சதம் கூட்டியிருப்பதையும், ஏற்கென வே கூட்டியுள்ள 18 சதமும் கொந்தரப்பு ரேட்டில் பிரதி பலித்து ஒரு ஏக்கருக்கு 4 ஆள் வீதம் சம்பளம் கொடுக்க வேண்டுமென தொழிற்சங்கங்கள் வற்புறுத் தின. இதை பல கோணங்களில் பரிசீலனை செய்து சீக்கிரத்தில் தீர்ப்பு வழங்குவதாக தொழில் கமிஷ னர் குறிப்பிட்டார்.

(இ) ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா செல் வோருக்கு பிரயாணச் செலவுக்கும், பொதிகள் ஏற் றிச் செல்ல வாகனச் செலவுக்கும் இப்போது கொடுக் கப்படும் மானிபம் தற்போதைய கஷ்டநிலையை சமா ளிக்கத்தக்கவாறு கூட்டிக் கொடுக்க வேண்டும் என்று தொழில் சங்கங்கள் வற்புறுத்தின. ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தமான ஏனைய விசயங்களை வெளிநாட்டு இலாக் கா பரிசீலனை செய்யும் போது இதற்கும் முடிவு காணப் போவதாக தொழில் கமிசனர் குறிப்பிட்டார்.

தொழில் கமிசனர் தலைமையில் நடைபெற்ற இப்பேச்சு வார்த்தையில் நமது சங்கச் சார்பில் திருவாளர்கள் வி. வி. வேலுப் பிள்ளை, பி. பெருமாள், பி. வி. கந்தையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

## மானில அலுவலகங்கள்

இதுவரை அட்டன், நுவரேலியா, பதுளை, இரத்தினபுரி கண்டி ஆகிய இடங்களில் மட்டுமே மானிலக் காரியாலயங்கள் இயங்கிவந்தன. இப்போது புசல்லாவ, நோர்வுட் ஆகிய இடங் களிலும் புதிதாக மானிலக் காரியாலயங்கள் திறக்கப்பட்டுள்ளன.

## பதவி உயர்வு

அட்டன் கிளைச் செயலாளராகக் கடமையாற்றிய திரு. எஸ். பி. ரெட்டியார். அட்டன் மானிலச் செயலாளராகவும், புசல்லாவ கிளைச் செயலாளராகக் கடமையாற்றிய திரு. எம். எஸ் துரைசாமி கம்பளை மானிலச் செயலாளராகவும் பதவியுயர்வு பெற்றுள்ளார்கள்.

## தோட்டப் பாடசாலைகள் கையேற்பு

" எல்லாத் தொழிற்சங்கங்களும் ஒன்று சேர்ந்து ஒவ்வொரு பகுதியின் மத்திபமான நிலையில் அமைக்கக் கூடிய சுமார் நூறு பாடசாலைகளை தேர்ந்தெடுத்தால். அதற்கு தேவையான நிதி கட்டிட வசதி, தளபாடங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட் களுக்கு தங்களால் ஆனவற்றை செய்வதாக உறுதியளித்தீர்கள். "

" அதன்படி பரிசீலனையின் பின் தோட்டப் புறங்களில் வசதியான இடங்களில் அமைக்க 165 பாடசாலைகளை தேர்ந் தெடுத்து கடந்த 6-9-73 ல் தொழிற்சங்கங்கள் தங்களுக்கு சமர்ப் பித்தன. நீங்கள் உறுதியளித்ததற்கிணங்க, என்ன நடவடிக்கை கள் இது சம்பந்தமாக, தங்கள் அமைச்சு எடுத்துள்ளது என்பது பற்றி தங்களின் பதிலை எதிர்பார்க்கிறேம் " என்று தோட்டத் தொழில் துறை அமைச்சை தொ. தே. சங்கம் கேட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது காரியாலயங்களும்
## உத்தியோகத்தர்களும்

### பதுளை மாநிலம்

திரு. பி. பழனிசாமி கிளைச் செயலாளர் பதுளை
" எம். பி. துரைசாமி " பசறை

### நுவரேலியா மாநிலம்

திரு. எஸ். ஜேசுநேசன் உதவி கிளைச் செயலாளர் இராகலை
" எஸ். பிலிப் " " " நுவரேலியா
" ஆர். கிருஸ்ணசாமி " " " தலவாக்கொல்லை
" வி. வடிவேல் " " "
" பி. எம். முருகையா " " " அக்கரப்பத்தனை

### அட்டன் மாநிலம்

திரு. எஸ். பி. ரெட்டியார் மா. செ அட்டன்
" ஏ. அம்மையப்பன் உ. கி " "
" எம். பழனியாண்டி " " டிக்கோயா
" சுப்பிரமணியம் " " அட்டன் & டிக்கோயா
" எம். பாலசுப்பிரமணியம் (நா - அ) அட்டன்
" எஸ். மரியதாஸ் உ. கிளைச் செயலாளர் பத்தனை
" ராமச்சந்திரன் பிரச்சாரகர் பத்தனை

### நோர்வுட் மாநிலம்

திரு. ஜே. எம். செபஸ்தியான் மா. செ நோர்வுட்
" எம். எஸ். கந்தையா உ. கி. " "
" ஏ. தங்கராசா கி " பொகவந்தலாவ
" ஆர். ஜெயராமன் காரியால உதவியாளர் "
" பி. இராமையா கிளைச் செயலாளர் மஸ்கெலியா
" எஸ். ஆர். காளிமுத்து உதவி கிளைச் செயலாளர் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கண்டி மானிலம்

| | | |
|---|---|---|
| திரு. எஸ். ஓ. இரத்தினராஜா | மா. செ. | கண்டி |
| " எஸ். பெரியண்ணன் | கா. உ. | " |
| " எஸ். ராமையா | கி. செ | பன்விலை |
| " ஏ. எஸ். ஏகாம்பரம் | பிரச்சாரகர் | " |
| " எஸ். பி. நாகராஜா | கி. செ | மாத்தளை |
| " எஸ். டபிள்யூ தனபால | உ. கி. செ | கேகாலை |

### கம்பளை மானிலம்

| | | |
|---|---|---|
| திரு. எம். எஸ் துரைசாமி | மா. செ. | கம்பளை-புசல்லாவ |
| " ஆர். மாரிமுத்து | கி. " | நாவலப்பிட்டிய |
| " எஸ். வீரப்பன் | கா. உ. | " |
| " ஆர். பி. தங்கமுத்து | கி. செ. | கலகா |

### இரத்தினபுரி மானிலம்

| | | |
|---|---|---|
| திரு. வி. எம். தேவராஜ் | கி. செ. | பலாங்கொடை |

குறிப்பு:— அரசியல் பொருளாதாரச் செயலாளர் திரு. பி. பெருமாள் அட்டன், நோர்வுட், புசல்லாவ, கண்டி மானிலங்களின் மேற்பார்வையாளராவர்.

அமைப்புச் செயலாளர் திரு. ஜி. ராஜகோபால் நுவரேலியா, பதுளை மானிலங்களின் மேற்பார்வையாளராவர்.

---

## வாரியாப்பொல்லை மாத்தளை

வாரியாப்பொல்லை தோட்டத்தின் ஒரு பகுதியை அரசு சுவீகரித்ததால், 76 தொழிலாளர்களைக் குறைக்க வேண்டுமென தோட்ட நிர்வாகம் தொழில் கமிசனரிடம் அனுமதி கோரியது. தோட்ட நிர்வாகம் கூறிய தொழிலாளர்கள் மிகவும் வயது குறைவானவர்களாதலால் அவர்களை வேலை நீக்கம் செய்யக் கூடாதென்றும், சேவைகாலப்பணம் கொடுத்து நிறுத்தலாமென்றும் நமது சங்கப் பொதுச் செயலாளர் திரு. வி. கந்தையாவும் மாத்தளைக் கிளைச் செயலாளர் திரு எஸ். பி. நாகராஜாவும் விசாரணையின் போது எடுத்துக் கூறினார்கள். இதன்படி சங்கம் கேட்டுக் கொண்டவர்களுக்கு சேவைகாலப் பணம் கொடுத்து வேலையிலிருந்து நிறுத்தலாமென முடிவு செய்யப் பட்டது. சேவைக்காலப் பணம் கொடுக்கும் வரை அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்றும் கமிசனர் உத்தரவிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பகால நடவடிக்கைகள்

## ( ஐ - எல் - ஓ )

சுவீஸ் அரசு கூறியபடி ஒரு மாநாடு கூடியது. பன்னிரண்டு ஐரோப்பிய நாட்டுப் பிரதிநிதிகள் பெர்லின் நகரில் கூடினர் (1890) தங்கள் அரசாங்கங்களை கட்டுப்படுத்தும் முடிவு எதுவும் அவர்கள் எடுக்கவில்லை. குறிப்பிட்ட சில திட்டங்களை மேற் கொண்டால் நல்லது என்றும் சில தரங்களை உலக அளவில் அமுல் நடத்துவது என்று கூறியதுடன் நிறுத்திக் கொண்டனர்.

எக்காரணத்தைக் கொண்டும் 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை வேலைக்கு அமர்த்தக் கூடாது என்று அந்த மாநாடு கருதியது. மற்ற குழந்தைகளும் கூட இரவு வேலை செய்வது தடுக்கப்பட வேண்டுமென்றும், தொடர்ந்து ஆறு மணி நேரம் வேலை செய்வது தடுக்கப்பட வேண்டுமென்றும், தொடர்ந்து ஆறுமணி நேரம் வேலை செய்த பிறகு ஓய்வு கொடுக்க வேண்டுமென்றும் எடுத்துரைத்தது. பெண்களும் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களும் சுரங்கங்களில் வேலை செய்யக் கூடாது. வாராந்திர விடுமுறை, தொழிலாளர்களுக்கு வைத்திய உதவி, விபத்துக்களின்றும் பாதுகாப்பு ஆகியவற்றை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இம்மாநாடு கோரிற்று. விபத்து இன்ஷ்யூரன்ஸ் பற்றியும் இங்கு கூடியவர்கள் விவாதித்தனர். இவர்களுடைய ஆலோசனைகள் எல்லாம் சம்பந்தப்பட்ட அரசுகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. ஆனால் எவ்விதப் பயனும் உடனடியாக ஏற்பட்டுவிடவில்லை.

ஒரு விதத்தில் இக்கூட்டம் முன்னேற்றப் பாதையில் ஓர் அடியெடுத்து வைத்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. இயந்திரப் புரட்சிக்குப் பிறகு அரசாங்கங்கள் அதன் சமூக விளைவுகள் பற்றியும் உலகமட்டத்தில் தொழிலாளர் நலச் சட்டங்கள் உருவாக்கலாம் என்று சிந்தித்ததும் இதுவே. முதல் தடவை. அத்துடன் உண்மையான முன்னேற்றம் எதுவும் காண்பதற்கு, தொழில் நுணுக்கப் பிரச்சினைகளை ஆழ்ந்து ஆராய வேண்டுமென்றும், இது ஒரு திட்டத்தையொட்டியதாக இருக்கவேண்டுமென்றும் இம்மகாநாட்டில் புலனாயின.

இம்மாநாடு செயலளவில் ஒன்றும் சாதிக்கவில்லையென்பது உண்மைதான். ஆனால் தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் உலக அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டுமென்ற கொள்கையில் கருத்து ஒருமைப்பாடு காணப்பட்டது.

தொழிலாளருக்கு சட்டப்பாதுகாப்பு அளிப்பதற்காக 1900ல் சர்வதேசக் குழு ஒன்று நிறுவப்பட்டது. பல முன்னேற்றங்களுக்கு இது காரணமாயிருந்தது. இக்குழு ஏற்படுவதற்கு முன்னரே 1897ல் அதிகார பூர்வமற்ற கூட்டமொன்று பிரஸ்ஸல்சில் நடந்தது,

பல சமூக நலத்திட்டங்களுக்குத் தத்தம் நாடுகளில் காரணமாயிருந்த அரசாங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர். சர்வதேச அடிப்படையில் தொழிலாளர் வேலை அளவுகளை நிர்ணயிக்க வேண்டும் என்று இக்கூட்டம் முடிவு செய்திருந்தது. இவர்கள் தங்களுடைய நாடுகளில், அரசாங்கங்களிடமிருந்தும், தனிப்பட்டவர்களிடமிருந்தும் நன் கொடை பெற்று தொழிலாளர் நல சங்கங்களை நடத்தி வந்தனர். இவர்களே 1900ல் தொழிலாளருக்கு சட்டப் பாதுகாப்பு அளிக்கும் உலக அமைப்பு ஒன்றை ஏற்படுத்தினர். வியான் பூர்ஷ்வா (பிரான்ஸ்) எர்னஸ்ட் மகைம் (பெல்ஜியம்) போன்ற பிரமுகர்கள் இதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டனர். இதன் நிரந்தர அலுவலகம் சுவிட்சர்லாந்தில் உள்ள பாஸ்லே என்னுமிடத்தில் நிறுவப்பட்டது. சர்வதேசத் தொழிலாளர் நல செயலகம், தஸ்தாவேஜுகளையும் செய்திகளையும் தொகுத்தல், ஆராச்சி வேலைகளை மேற்கொள்ளுதல், பல்வேறு நாடுகளில் புதிதாக இயற்றப்படும் தொழிலாளர் சட்டங்களை அவ்வப்பொழுது மொழிபெயர்த்து வெளியிடுதல் போன்ற வேலைகளை மேற்கொண்டது.

அதுமட்டுமல்ல இயந்திரத் தொழில் நுட்பத்துறையில் உள்ள நிபுணர்கள் கூடுவதற்கான முன்னேற்பாடுகளை கவனமாகச் செய்து, பெர்ன் என்ற இடத்தில் ஒரு மாநாட்டை முற்கூறிய குழுவினர் கூட்டினர். சுவிஸ் அரசின் ஆதரவில் இக்கூட்டம் நடந்தது. இருபது நாடுகள் இதில் கலந்து கொண்டன. இரவு நேரங்களில் தொழிற்சாலைகளில் பெண்கள் வேலை செய்யக்கூடாது. தீக்குச்சி செய்வதற்கு வெள்ளை பாஸ்பரஸ் உபயோகிக்கக் கூடாது என்ற முக்கியத் தடைகளையும் இக்கூட்டம் வற்புறுத்திற்று. வெள்ளை பாஸ்பரஸ் என்ற இராசயனப் பொருள் ஒரு நஞ்சு. அதைத்தொட்டு வேலை செய்பவர்களுக்கு தாடைகள் இற்றுப் போகும். அதற்கு தடை விதிக்க வேண்டுமென்றது. இதனாலேயே 1896ல் பிரான்சில் தீக்குச்சித் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்தோரில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு எலும்பு இற்றுப் போயிருந்தது. வெள்ளை வகைக்குப் பதிலாக சிவப்பு வகை பாஸ்பரஸ் உபயோகிக்கலாம். அதில் அவ்வளவு ஆபத்து இல்லை. ஆனால் விலை அதிகம் வெள்ளை ரகத்தை உபயோகிப்பவர்களுடன் சிவப்பு பாஸ்பரஸ் உபயோகிப்பவர்கள் போட்டி போட்டு சமாளிக்க முடியாது. எனவே சர்வதேச ஒப்பந்தம் இதற்கு மிகவும் தேவையாக இருந்தது.

பெர்னில் 1906ல் பல அரசுகள் கூடி இந்தப்பிரச்சினையில் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன. இதற்கு முந்திய ஆண்டு நிறை வேறிய இரு முடிவுகளும் கூட இக்கூட்டத்தில் ஏற்பட்டன. தொழிலாளர் நலச் சட்டங்களை உலக அடிப்படையில் உருவாக்கும் முறை இதிலிருந்து திட்டவட்டமாகத் துவங்குகிறது. சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்க உலக நாடுகள் ஒத்துழைக்கும் வரலாற்றில் இது முக்கியமான கட்டம்.

இதற்குப்பிறகு 1914ல் உலகப்போர் தொடங்கியது.

**(வளரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா செல்வோர் கவனத்திற்கு

இந்தியா செல்வோர் தங்கள் சொந்த இடத்தை அடையு முன் எவ்வித கஸ்டங்களுக்கு ஆளாகின்றனர்கள். அவற்றை தடுப்பது எப்படி? என்பன பற்றி மண்டபம் கேம்பில் அமைக்கப்பட்டுள்ள "இந்தியா செல்வோர் சம்மேளனம்" இலங்கை தொழிற்சங்கங்களுக்கு எழுதிய சுற்று நிருபத்தை இங்கு தருகின்றோம்.

I <u>புனர் வாழ்வு</u> : கண்டி இந்தியத் தூதுவராலயத்தில் இந்தியா செல்வோருக்கு குடும்பக்கார்ட் வழங்கப் படும். குடிபெயர்வோர் அதில் தமக்கு என்ன உதவி வழங்கப்பட்டுள்ளது. எங்கு வேலை வழங்கப்பட்டுள் ளது. என்பனவற்றை நன்கு தெரிந்து கொள்ளல் வேண்டும். ஏனெனில் இந்தியா சென்றோரில் சிலர் ஆந்திரா, மைசூர், கேரளம் ஆகிய பிரதேசங்களுக் குச் சென்று தமக்கு உறுதி அளிக்கப்பட்ட படி உதவி கிட்டா, போகவே மீண்டும் சொந்தச் செலவில் மண் டபத்திற்கு வந்துள்ளார்கள். இப்படி வந்தவர்கள் மற்றவர்களிடம் தாம் பட்ட கஸ்டங்களைக் கூறியதி னல் மற்றவர்களும் போக மறுக்கின்றனர்கள். இச்சிக் களைக் தவிர்க்க மண்டபம் கேம்பில் உள்ள அதிகாரி களை நேரில் கண்டு தீர்க்கமான முடி வெடுத்துக் கொள்வது நல்லது.

II <u>மண்டபத்தில் தங்காது செல்வோர்</u> : இந்தியா செல்லு வோர், மண்டபத்தில் தங்குவதற்கும், ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை தம்முடன் வைத்திருப்பதற்கும் அனுமதியை தங்கள் குடும்பக் கார்ட்டில் பதிந்து கொள்ளல் வேண்டும். பதியப்படாதவர்கள் மண்டபத் தில் தங்கு வதற்கு அனுமதிக்கப் பட மாட்டார். இந்தியாவில் உறவினர்கள் இருக்கின்றனர்கள் எனக் கூறினால், பணம் வைத்திருக்க அனுமதிக்கப்பட மாட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III **சொந்து மாற்றம்** : மண்டபத்தில் தங்கிச் செல்லுவோர் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அந்நியச் செலவாணியை (பர்மிட் பணத்தை) இராமநாதபுரம், அல்லது இராமேஸ்வரம் வங்கியில் மாற்றிக் கொள்வது நல்லது. இல்லையேல் இலங்கையில் வைத்து தம்மால் எழுதப்பட்ட வங்கிக்கு அப்பணம் அனுப்பப்பட்டு விடும். இதனால் மண்டபத்தில் தங்கிச் செல்வோர் பல கஸ்டங்களை அனுபவிக்க நேரிடும்.

IV **பார்சல்களைப் பதிவு செய்தல்** : தாம் போக வேண்டிய புகையிரத நிலையத்திற்கே பார்சல்களை பதிவு செய்தல் வேண்டும். மண்டபத்தில் தங்கிச் செல்வோர் மண்டபத்திற்கு பதிவு செய்தல் வேண்டும்.

V **வரி கட்டத் தேவையில்லை** : இராமேஸ் வரத்தில் பார்சல்வரி, சொத்துவரி கட்டத் தேவையில்லை. இவைகளுக்கான வரிகளை இந்திய அரசு கட்டும். தங்களுக்கு வேண்டிய உதவிகளை துறைமுக அதிகாரிகளிடத்தில் நேரடியாக பெற்றுக் கொள்ளலாம்.

VI **பார்சல்களைப் பெற்றுக்கொள்ள** : சொந்தக் கிராமங்களுக்குச் செல்லுவோர் இராமேஸ்வரத்தில் தங்களது பார்சல்களை பொறுப்பேற்றுக் கொள்வது நல்லது. இதனால் தங்களது உடைமைகள் சுனக்கமின்றி தம்முடன் எடுத்துச் செல்ல வழிகிடைக்கின்றது. பார்சல்கள் சுனங்கிக் கிடைத்தோரின் முறைபாட்டிற்கிணங்க இச்சலுகையை இந்திய சுங்க இலாகா வழங்கியுள்ளது.

1000 ரூபாய் மதிப்புள்ள வீட்டுத் தளபாடப் பொருட்களை பெர்மிட் இன்றி எடுத்துச் செல்லலாம்.

VII **மண்டபத்தில் போட்டர்கள்** : "இந்தியா திரும்புவோர் சம்மேளனம்" போட்டர்களை நியமித்துள்ளார்கள். ஐம்பது காசுக்கு ஒரு பொதி என்ற கணக்கில் இவர்களுக்கு கூலி வழங்க வேண்டும்.

VIII **டாலர்** : இந்தியா செல்வோர் இராமேஸ்வரத்தில் மாற்றிக்கொள்ள, இலங்கை வங்கியிலோ, அல்லது தலைமன்னாரில் நிருவப்பட்டுள்ள வங்கியிலோ டாலர்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்விதம் பணத்தை மாற்றி எடுத்துச் செல்வது சொந்தச் செலவுகளை கஸ்டமின்றி செய்து கொள்ள வழி வகுக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 6-3-74 ல் தொரக்கொல்லை பணியகணக்கு மாரியாயின் தொழில் கோட்டு வழக்கு விசாரணைக்கு வந்தபோது, அன்னாரின் 28 வருட சேவைக்கு, 630/-வை சேவைகாலப்பணமாக நமது சங்கம் கண்டி தொழில் கோட்டில் வாங்கிக் கொடுத்துள்ளது. இப்பணத்தை தோட்ட நிர்வாகம் 30-5-74 க்கு முன்பாக மாரியாயிக்கு கொடுக்க வேண்டுமென கோடு தீர்ப்பளித்துள்ளது.

இதே தேதியில் (6-3-74) நூல்கந்தலா தோட்ட தொழிலாளர்களின் சார்பாக நமது சங்கம் தொழில் கோட்டில் தாக்கல் செய்திருந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது கீழ்கண்டோர்களுக்கு சேவைகாலப் பணத்தை தோட்ட நிர்வாகம் வழங்கவேண்டுமென உத்தரவிட்டுள்ளது.

| | |
|---|---|
| என். கந்தையா | 612 - 50 |
| ஆராயி | 135 - 00 |
| என். சின்னையா | 262 - 50 |
| சிரங்காய் | 555 - 00 |
| முனுசாமி | 1032 - 00 |
| எம். பூஞ்சோலை | 555 - 00 |
| பி. மாரியாய் | 405 - 00 |
| மொத்தம் | 3557 - 00 |

இவ்விரு தொழில் கோட்டுவழக்குகளையும் நமது கம்பனை மானிலச் செயலாளர் திரு. எம். எஸ். துரைசாமி நடத்தினார்.

---

★

"உலகம் ஒரு போர்க்களம் அதில் நம் வாழ்க்கை ஒரு போராட்டம். போராட்டத்தில் வெற்றிகாண நாம் கைக்கொள்ள வேண்டிய ஆயுதம் எது? வெற்றி பெறுவோம் என்ற எண்ணம் தன் பலத்தில்தான் கொள்ளும் திடமான உறுதி!"

நெப்போலியன்

"வாழ்க்கை என்பது ஆற்றில் எதிர்நீச்சல் போடுவது போன்றது. முன்னேறிக் கொண்டே போக வேண்டும். சற்று நிறுத்தினால் போதும், பின்னுக்கு அடித்துத் தள்ளிவிடும்"

ஒரு சீனப் பெரியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமை இலக்கியம்

— ஸி. வி. வேலுப்பிள்ளை —

சிங்களம் புட்பகம் போன்ற தீவகங்களிலும், தூரத்தேயுள்ள சீனுவிலும் தமிழர்கள் புலிக் கொடியையும், மீன் கொடியையும் நாட்டியதாகச் சொல்லப் படுகிறது. அன்று அவர்கள் கடல் கடந்து சென்று அமைத்த ராஜ்யங்களை புல்லும், கல்லும் கொண்டு போய்விட்டன. எனினும் கலைத்தூதுவர்களாக யாழ் பிடித்து ஈழம் வந்த பாணர் களின் சந்ததியில் தோன்றிய திரு. தாமோதரம் பிள்ளை, சுவாமி விபுலானந்தர் சுவாமி ஞானப்பிரகாசர் போன்ற பெரியார்கள் தமிழ் இலக்கியத்தைச் செழிப்புறச் செய்தனர். ஆனந்தக் குமாரசாமி, தனிநாயக அடிகள், தம்பிமுத்து ஆகியோர் மீன் கொடியையும், புலிக்கொடியையும் உலக இலக்கிய அரங்கில் நாட்டி விட்டார்கள். பாணரை அனுப்பிய தமிழ்நாடு 150 ஆண்டுகளுக்கு முன் பல்லாயிரக் கணக்கான மக்களை தொழில் அடிமைகளாக தென்னுப்பிரிக் காவுக்கும், மேற்கத்திய திவுகளுக்கும், பீஜித்திவுக்கும், இலங்கைக்கும் அனுப்பியது.

"கூடைதலை மேலே
குடிவாழ்க்கை கானகத்தில்"

என்ற நிலையில் அவர்கள் பிறந்த பொன்னுடும் வளர்ந்த திருநாடும் வெறுத்து ஒதுக்க, அடிமைகளாய் 150 வருட நீண்ட கொடிய ஆண்டுகள் வாழும் வாழ்க்கை கண்ணீரால் எழுதப் பட்ட ஒரு பெருங்காப்பியம். அடிமைத் தொழிலாளர்களாய் அன்றும், நாடற்ற அனுதைகளாய் இன்றும் அவர்கள் படும் கஸ்டங்கள், சகிக்கும் அவமரியாதைகள் மனதைத் தொடும் கதைக்கு வித்து. இச்சூழ்நிலையில் வாழும் மக்களது இலக்கிய முயற்சி சொற்பம் என்றுலும் கடந்த 15 ஆண்டுகளாக மலைநாட்டு எழுத்துக்கள் கவிதை, கட்டுரை நடைச்சித்திரம், சிறுகதை நாவல், நாடகம் ஆகியன அடிக்கடி பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. சில ஆண்டுகளாக இவை வெளிவருகின்றபோதும், ஒரு அருவியாக ஊற்றெடுப்பதற்கு சுமார் 50 வருடங்கள் பிடித்தன.

பரந்த அடிப்படையில் நாம் இவற்றை நோக்கினுல் தமிழ் நாட்டிலிருந்து எப்போது மக்கள் இங்கு குடியேறினர்களோ, அன்று தொட்டே தமிழ்க் கலை, கலாச்சாரம் இலக்கியம் ஆதியன இங்கு வளரத் தொடங்கின.

1930க்கு முன் மலைநாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் பணவசதி மிக்க ஒரு தனிப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். அரசாங்க பாடசாலைகளிலும் தங்கள் உயர் கல்வியை மேற்கொள்வதற்கான வசதி இவர்களுக்கு இருந்தன. எனவே இவர்கள் ஆங்கிலத்தையும் தமிழையும் கற்றபடியால் வெளிநாட்டு இயக்கங்களால் வெகுவாக உந்தப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1930ம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் செய்தித் தாள்கள், சஞ்சிகைகள் தமிழில் சொற்பம். தமிழ் நாட்டிலிருந்து பிரபல சஞ்சிகைகளான லோகோபகாரி, அமிர்தகுணபோதினி ஆனந்தபோதினி, மகாவிகட தூதன், நவசக்தி, மொடன் ரிவியூ இந்தியன் ரிவியூ ஆகிய சஞ்சிகைகள் மலைநாட்டிலுள்ள பணம் படைத்த வீடுகளுக்கு வருவதுண்டு சுதேசி இயக்கத்தைப் பற்றியும் சுதந்திரத்தைப் பற்றியும் தாகூர், சரோஜினி பாரதி நாமக்கல் கவிஞர் ஆகிய பெரும் கவிஞர்கள் உணர்ச்சி பிறக்கும் வகையில் அவ்வப்போது பாடி வந்தார்கள் இது தவிர பரஸ்கரதாஸ் போன்ற பாடகர்கள், கீர்த்தனங்கள் மூலமாக சுதேசி இயக்கத்தைப் பற்றியும் தலைவர்களைக் குறித்தும் பாடல்கள் இயற்றிப்பாடி வந்தனர். இவைகளின் உத்வேகம் இங்குள்ளவர்களை தாக்கியது. இதே வேளையில் வேதநாயகம் பிள்ளை, சங்கரதாஸ் சுவாமி உடுமலை முத்துசாமி கவிராயர் ஆகியோர்களின் படைப்புகளும் மலைநாட்டை எட்டித் தொட்டன. பொதுவாக உரைநடைச் சித்திரம் வளர்ந்து வந்த காலமது. புதிய நவீனங்கள் இங்கு வரவில்லை சாதாரண மக்கள், ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி, மின்சாரமாயவன், இராஜா தேசிங்கு, பாண்டவர் வனவாசம், நளமகராஜன், மன்னன் சின்னாண்டி ஆகிய கதைகளையும், மாரியம்மன் தாலாட்டு, பதினென்சித்தர் பாடல்கள் ஆகியவற்றையும் மிக ரசனையோடு பாடியும் வந்தார்கள்.

மலைநாட்டில் உள்ளவர்கள் எழுத்தறிவில் குறைந்தவர்களாய் இருந்த போதிலும் "பெரிய வீட்டில்" இருந்தவர்களுக்கு எழுத, படிக்க வாய்ப்புகளும், சாதாரண மக்களுக்கு பலரகமான இலக்கியத்தை ரசிக்கும் தன்மையும் இருக்கவே செய்தன.

1939க்கு முன் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே தங்கு தடையின்றிப் பிரயாணம் செய்வதற்கான வசதிகள் இருந்தன. அப்போது மதுரை திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் இருந்து ஏராளமான புலவர்கள், கவிஞர்கள், அறிவாளிகள், கதிர்காமம், சிவனொளிபாதமலை, யாத்திரையை மேற்கொண்டு இங்கு வந்தனர்.

இவர்கள் ஒவ்வெருவரும் ஒரு தனிப்பட்ட துறையில் பாண்டித்தியம் பெற்றவர்கள். பாரதம், இராமாயாணம் பாடும் புலவர், திருப்புகழ் கவிராயர், காவடிச் சிந்துப் பாடகர், தியாகராஜர் கீர்த்தனங்களை இசைக்கும் சங்கீத வித்துவான்கள் ஆகியோர் தமது யாத்திரைக் காலங்களில் பெரிய வீடுகளுக்குச் சென்று பாடி சன்மானம் பெற்றுப் போவதுண்டு. இவர்கள் வருகை இலக்கிய உணர்ச்சியை வளர்த்தது. அந்தக் காலத்தில் சினிமா இல்லை. மலைநாட்டில் சில முக்கிய பட்டினங்களில் நாடகங்கள் நடைபெற்றன. லங்கா தகனம், இராமாயணம், குலேபகாவலி, அரிச்சந்திரன் மயான காண்டம். கண்டிராசன் கதை, சத்தியவான் சாவித்திரி ஆகிய நாடகங்கள் இவற்றில் பிரக்கியாதி பெற்றவை.

இவைகளின் பிரதிபலிப்பாக தோட்டங்களில் அரிச்சுனன் தபசு, அரிச்சந்திர விலாசம், நந்தன் சரித்திரம், ஒட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம், மருதை வீரன், பொன்னர் சங்கர் ஆகிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டு வந்தன. இதைத் தவிர ஏனைய கிராமிய ஆடல், பாடல்களும் மலிந்திருந்த காலமது. இவற்றிலிருந்து மலைநாட்டில் 1930க்கு முன்னரும் உயர்ந்த ரக கலாச்சாரமும் இலக்கியமும், வேரூன்றி வளர்வதற்கான வித்துக்கள் இடப்பட்ட தென்பது தெளிவாகும்.

பணவசதியுள்ள வீட்டுப் பிள்ளைகளுக்கு ஆங்கிலமும், தமிழும் படிக்கக்கூடிய வசதிகள் இருந்ததென்று முன்னர் குறிப்பிட்டிருந்தோம். இத்தகைய வசதிகளைக் கொண்டவர்களில் காலம் சென்ற ஸி. சுப்பிரமணியம், ஆர். ராமையா ஆகியோர் அமிர்த குணபோதினி, போன்ற தமிழ் சஞ்சிகைகளுக்கு தமது படைப்புக்களை ஆக்கியளித்து வந்தார்கள். இவர்களுடைய படைப்புக்கள் பெரும்பாலும் கவிதைகளாகவும், கட்டுரைகளாகவும் இருந்தன, இந்த எழுத்தாளர்கள் டிம்புளைப் பகுதியைச் சேர்ந்தவர்கள். இதற்கு முன்னர் அதாவது பின் கோப்பி காலத்தில் மாத்தளைப் பகுதியில் அருட்கவி அப்துல் காதிருப் புலவர் தோன்றினர் இவர் தனிப்பெரும் கவிராயர். இந்திய தேசிய இயக்கத்தில் பங்கு கொண்ட தலைவர்களின் தியாகம், பெருமை, ஆற்றல் ஆகியவற்றைப் புகழ்ந்து மதுரை பாஸ்கரதாஸ் பாடிய கீர்த்தனங்களும் மலைநாட்டில் ஒரு தனி இடத்தை வகித்தன என முன் குறிப்பிட்டோம். பாரதியின் அதிமுக்கிய பாடலான "கரும்புத் தோட்டத்திலே" என்ற பாடலும், அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்தும் இங்கு எதிரொலித்தது. இவற்றைப் பின்பற்றி சிவஞெளிபாதம் கதிர்காமம் ஆகிய ஸ்தலங்களைப்பற்றியும் பேராதனை, ரதாளை, நுவரெலியா ஆகிய இடங்களைப் பற்றியும் அரசியல் சம்பவங்களைப் பற்றியும், நாவலப்பிட்டி பெரியாம்பிள்ளை; எஸ். எஸ். நாதன், கந்தசாமி கணக்கப்பிள்ளை, எம்டன் ஏ. விஜயரட்ண ஆகியோர் பாடல்களைப் புனைந்தனர். அவற்றைப் புத்தகங்களாக வெளியிட்டு மக்கள் மத்தியில் பாடியும் வந்தனர்.

தாகூர் சரோஜினி போன்ற இந்தியக் கவிகளின் படைப்புகளும் மொடன் ரிவியு இந்தியன் ரவியு ஆகிய சஞ்சிகைகளும் "பெரிய வீட்டுப்" பிள்ளைகளை மிகவும் கவர்ந்தன. இந்த உந்துதலில் ஆட்பவர்களில் கே. கனேஷ் ஸி. வி. வேலுப்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். திரு. கனேஷ் தமிழில் மொழிபெயர்த்த திரு. முல்க்ராஜ் ஆனந்தின் ஆங்கில நாவலும், ஸி. வி. வேலுப்பிள்ளை ஆங்கிலத்தில் எழுதிய "பத்மாஜினி" என்ற கவிதை நாடகமும் மலைநாட்டில் இருந்து வெளிவந்தன. 1934ம் ஆண்டு கவி. சிதம்பரநாத பாவலர் பௌத்தாயன என்ற பெயரில் புத்த பெருமானின் சரித்திரத்தை கவிதைகளாகப் படைத்து வந்தார்.

இந்தக்காத்தில் வீரகேசரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய காலம் சென்ற திரு. எச். நெல்லையா அவர்கள் வேலுப்பிள்ளையின் கட்டுரைகளை அடிக்கடி கேசரியில் பிரசுரித்து வந்தார். 1940க்குப் பின் மலைநாட்டில் கல்வி எல்லோருக்கும் உரிய சொத்தாக மாறியது. அதோடு தமிழகத்தில் மணிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடி சகாப்தம் உதயமாயிற்று. இதன் தாக்கம் மலைநாட்டை எட்டியது. 1948ம் ஆண்டில் ஸி. வி. வேலுப்பிள்ளையின் "வழிப்போக்கன்" என்ற ஆங்கில வசனக்கவிதை வெளிவந்தது

இதற்குப்பின் மலைநாட்டில் சிறுகதை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வேலுப்பிள்ளையின் "தேயிலைத் தோட்டத்திலே" என்ற தொடர் நடைச் சித்திரங்கள் இக்காலத்தில்தான் வெளி வந்தன. தேயிலைத் தோட்டத்தை முதன் முதலாக பெருமையோடு "மலை நாடு" என்று குறிப்பிட்டது இந்தக் கட்டுரையில் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

1950ல் கலாநிதி கே. கைலாசபதி தினகரனின் ஆசிரியராக இருந்தபோது புதுமை இலக்கியம் உதயமாக பெரும் ஆதரவாக இருந்தார். மலை நாட்டில் உத்வேகம் பிறக்கத் தொடங்கியது. தேயிலைத் தோட்டத்து வாழ்க்கையை நிலைக்களனாக வைத்து திருவாளர்கள் பொ. கிருஷ்ணசாமி, செந்தூரன், ரஃபேல், எம்.எஸ். ராமையா, தியாகராஜா, பன்னீர்ச் செல்வம், தெளிவத்தை ஜோசப், தமிழோவியன், ஆகியோர் சிறுகதைகளையும் படைத்தார்கள். வேலுப்பிள்ளையின் ''வாழ்வற்ற வாழ்வு'' என்ற நவீனமும் தினகரனில் வெளிவந்தது. இது தேயிலைத் தோட்டத்து வாழ்க்கையைப் பின்னனியாகக் கொண்டது.

இக்காலத்தில் டி. எம். பீர்முகமது எழுதிய "கங்காணி மகள்" என்ற புத்தகமும், அப்பாஸ் சிருஸ்டித்த "ஒரு துளிக் கண்ணீர்" என்ற நூலும் வெளிவந்தன. ஆரம்ப காலத்தில் பாடல்களில் மட்டும் ஈடுபாடுகாட்டி வந்த எஸ். எஸ் நாதனும், காலஞ்சென்ற பெரியசாமியும் கவிஞர்களாய் மாறினர். சக்தி பாலையா கவி, சித்திரப்படைப்பில் ஈடுபட்டிருந்தார். கந்தசாமி கணக்கப்பிள்ளை பிரஜா வுரிமை கெடுபிடிகள் குறித்துப் பாடினார். இலங்கை வாழ் எட்டு லட்சம் மக்களின் அவலக் குரலை வேலுப்பிள்ளை "தேயிலைத் தோட்டத்திலே" என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் கவிதையாகப் படைத்தார். இக்கவிதைகள் நூலுருவில் வந்தபோது இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள விமர்சகர்கள் இதை பாராட்டி வரவேற்றனர்.

1960க்குப் பின்னர் இளம் எழுத்தாளர் குழு ஒன்று தோன்றியது. இக்குழுவினர் அதிகமாக சிறுகவிதை, கட்டுரைகளை எழுதுவதில் ஈடுபட்டிருக்கிறார்கள். தென்னவன், குமரன், இராம சுப்பிரமணியன், மு. சிவலிங்கம், சிக்கன் ராஜ், மல்லிகை குமார், காந்தி, ஐசேக் ஆகியோர் இவர்களில் முக்கியமானவர்கள். இரா. சிவலிங்கம், கார்மேகம், விஸ்வரத்தினம், கு இராமச்சந்திரன், சாரல் நாடன் ஆகியோர் உரை நடையிற் கவனம் செலுத்துகின்றார்கள்.

அண்மையில் வெளிவந்த முக்கிய மலைநாட்டுப் படைப்புகள் - குறிஞ்சிப்பூ, குறிஞ்சிமலர், தூவானம். தாயகம், மலைநாட்டு சிறுகதைத் தொகுதி என்பன. உழைக்கப் பிறந்தவர்கள், தூரத்துப்பச்சை என்னும் நூல்கள் சமீபத்தில் வெளிவந்தவைகளாகும்.

மலைநாட்டில் நடக்கின்ற இலக்கிய முயற்சிகளை புத்தக ரூபமாக வெளியிடுவதற்கான சாதனங்கள் இருந்தால் அதுவே ஒரு தனிச்சரித்திரமாய்அமையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரத மணி

சீர்மேவு ஜெயசீலி ! யொளிர்கருணை
தியங்குமணி கமலவேணி !
தார் மேவு சமதர்மம் நடுவுநிலை புரந்தருளும்
சாந்தமயமான சொரூபி !
பார்மேவு புண்ணியை ! புகழேந்துந் திண்ணியை !
பார்த்திபன் நேருவின் புத்திரி !
கார் மேவு பூத்தமலர் தாரகை இந்திரா காந்தி !
காசினியில் வாழி ! சதாவாழி ! வாழி !

பூமருவு மாசியறக் கதிர்வீசுங் காந்திய
புனித நிறை தாரணி !
மாமருவு பண்பு செறி யன்புருவான தொரு
மாண்பு மிகு சற்குணி !
தேமருவு மாமணி நேருவின் வாரணி !
தேசமிளிர் காரணி !
பார்மருவு பாரத பூஷணி இந்திராகாந்தி !
பாரினில் வாழி ! சதா வாழி ! வாழி !

பூமணக்கு முயர்ஞான மிளிர் சுகுண செய்கையெலாம்
பூர்த்தியாய் பூத்த மணியே !
புண்ணியர்கள் புகழுமா பதிதரு மழனேன் கருணை
புகழ் பெருக வந்த மணியே !
மாமணக்கு கண்ணொளியோ ! முகமதியோ வெனதிகழ்ந்த
மகிபன் ஜவஹர் லால் நேரு
மக வெனவே வாய்ந்த கெம்பீரமணி !
மாயூகமணி யுந்தருமணி !

தேமணக்கு சுகிர்தமணி ! யிருநாங்கு திக்குந்
தேடரிய கண்ணிய மணியே !
ஜெகராஜ யோகர்கள் சிரோமணி ! சிகாமணி !
திகழ் கமலசீல மணியே !
பாமணக்கு பாரதத்தின் பிரதமராய்ப் பதவிதாங்கி
பண்பெருக ஆளுமணியே !
பகரரிய தவமணி ! புவமணி ! இந்திராகாந்தி !
பாரினில் வாழி! சதாவாழி ! வாழி !

வி. சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திக் கடிதம்

அன்புள்ள தொழிலாள நண்பா,

நாடற்றவர் நிலை எவ்வாறு, யாரால், எந்நிலையில் உருவாக்கப்பட்டது என்பதை இக்கடிதத்தில் விளக்குவதாக முன் எழுதியிருந்தேன். நாடற்றவர் நிலையை விளக்கு முன், இந்நாட்டில் குடியேறிய இந்திய வம்சா வழியினரின் சரித்திரத்தை ஓரளவு தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

இலங்கை வரலாற்றின்படி, இந்நாட்டில் வதியும் பெரும்பான்மை சமூகத்தினரான சிங்களவர்களும், மற்ற சமூக மாகிய தமிழரும். ஆரம்பத்தில் இந்தியாவிலிருந்து, இங்கு குடியேறியவர்க்கமே; சிங்களவர்கள் வங்காள தேசத்திலிருந்தும், தமிழர்கள் தென்னிந்தியாவிலிருந்தும், குடியேறியவர்கள் என்பதே சரித்திரம். இன்று இந்நாட்டில் நாடற்றவர்களாக வதியும் இந்தியா வம்சா வழியினரும் இந்தியாவிலிருந்து இந்நாட்டில் பின்னைய காலத்தில், அதாவது 150 வருடங்கட்கு முன் இங்கு கொண்டு வரப்பட்டார்கள். ஆகவே இந்நாட்டின் முக்கிய சமூகத்தினர்களாகிய சிங்களவர்களுள் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் ஆகியோர் இந்திய வம்சாவழியினரே. இலங்கை, இந்தியாவின் மிக அண்மையில் உள்ள நாடுமாத்திரமல்ல, சமூக, கலாச்சார பண்புகளால் ஒன்றிணைந்தவை. 1839 வருடம் இந்தியர்கள் வேறு நாடுகளில் குடியேற்றம் செய்வதை தடுக்கச் சட்டம் இயற்றியபோது, இலங்கை குடியேற்றத்தை மாத்திரம் அனுமதித்து அதன் மூலம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்பு வலியுறுத்தப்பட்டது.

1920 ம் வருடம் இலங்கையில் உணவு நெருக்கடி ஏற்பட்ட போது, அப்போது இந்திய வைஸ்ராயாக இருந்த செல்ம்ஸ் போர்டு பிரபுவை, இலங்கையில் இருந்து சென்ற விசேஷ தூதுக் குழு, இலங்கையை இந்தியா அயல் நாடாகக் கருதாது உணவு நெருக்கடியைத் தீர்க்க உதவுமாறு கேட்டதாக சரித்திரம் கூறுகிறது.

ஆகவே, 1920ம் வருடத்திலேயே இந்நாட்டில் குடியேறிய இந்தியர்கட்கு சம அந்தஸ்து வழங்க பல வழிகளில் உறுதிப்படுத்தப்பட்டன. இலங்கை லேபர் கட்டுப்பாட்டு அதிகாரியால், தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு குடியேற விரும்பும் தொழிலாளர்கட்கு விநியோகித்த பிரசுரத்தில், இந்நாட்டில் குடியேறும் தோட்டத் தொழிலாளர்கள் மற்ற சமூகத்தினரோடு சம உரிமைகளோடு வாழ உறுதி கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேறிய தொழிலாளர் கட்டுப்பாட்டு அதிகாரி அவர்களின் 1925ம் வருட அறிக்கையில் சட்ட மன்றத்தில் (Legislative Council) " இந்தியர்கட்காக விசேச பிரதி நிதித்துவம் ஏனைய பிரித்தானிய பிரஜைகட்குரிய சட்ட உரிமைகளோடு வேறு சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன" என்று குறிப்பிட்டுள்ளார். இந்நிலை 1926, 1927, 1928, 1929 ஆகிய வருடங்களில் வெளியிடப்பட்ட அறிக்கைகளிலும் உறுதிப் படுத்தப்பட்டன.

இலங்கையின் 1920, 1923 அரசியல் அமைப்புச் சட்டங்களிலும் இந்தியர்களின் உரிமைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன இலங்கை அரசியல் தலைவர்களும் இந்நிலையை அவர்கள் போக்கால் உறுதிப்படுத்தினர். 1927ம் வருடம் நடை பெற்ற இலங்கை தேசிய காங்கிரஸ் பொது மகாநாட்டில் சிங்களவர்களுக்கு உள்ள சம உரிமை, இந்தியர்கட்கு வழங்கப்படலாகாது என்ற பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறாது போனது சரித்திரப் பிரசித்தமானது. 1927 - 1928ல் டொனமூர் கமிசன் முன்னையில் சாட்சியளித்த எவரும் வாக்குரிமை விசயத்தில் இந்தியர்களுக்கும் சிங்களவர்கட்குமிடையில் ஏதும் வித்தியாசமிருக்க வேண்டுமெனக் கோரவில்லை. 1928ம் வருடம் இந்தியர்களுக்கு வாக்குரிமை வழங்கும் விசயத்தில் வித்தியாசமிருக்க வேண்டுமென சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. ஆகவே 1930ம் வருடம் வரை இலங்கையில் வாழ்ந்த இந்தியர்கள் சகல உரிமைகளோடும் மற்ற சமூகத்தினரோடும் சம அந்தஸ்தோடு வாழ்ந்து வந்துள்ளார்கள். டொனமூர் சிபார்சுகளின் விளைவாக இலங்கை வாழ் இந்தியர்கள் அரசியல் உரிமை பெருமளவில் பாதிக்கப்பட்டது. இலங்கைக்கு சர்வதேச வாக்குரிமை வழங்க சிபார்சு செய்த டொனமூர் கமிசன் இலங்கையில் தொடர்ந்து 5 வருடம் வசித்தவர்கட்கு வாக்குரிமை வழங்கியது

முன்பு ஒரு தொகுதியில் ஆறுமாதகாலம் தொடர்ந்து வசித்தவர்கட்கு அத்தொகுதி வாக்காளர் இடாப்பில் பெயர் பதிவு பெற தகுதி பெற்ற நிலையை இச்சிபார்சு மாற்றியது. எனினும், இலங்கையில் அக்கரை உள்ளதை வெளிப்படுத்த 5வருட வாசகாலம் நிருபிக்குமாதலால் இந்தச் சிபார்சு கண்டனத்தின் மேல் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் டொனமூர் கமிஷன் சிபாரிசுக்குப் பின் நிலை மோசமடைந்தது கல்வியறிவு சொத்து உள்ளவர்கள் 5 வருட வாசகாலம் இருந்ததாலே வாக்குரிமை வழங்கப்பட்டது. வாசகாலத்தை நிருபிக்க நிரந்தரக் குடியேற்ற அத்தாட்சிப் பத்திரமும் கோரப்பட்டது.

இதன் காரணமாக, இலங்கையில் குடியேறிய பெரும்பான்மையான இந்தியத் தொழிலாளர்கட்கு வாக்குரிமை இல்லாது போகவே மேற்கூறிய சிபார்சுகள் உதவின. டொனமூர் சிபார்சிக்குப்பின் நடைபெற்ற இரண்டு தேர்தல்களிலும் இந்நிலை உறுதிபடுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் தேர்தலில் கொழும்பு மத்திய தொகுதிவாக்காளர் இடாப்பில் 3000 பெயர்கள் பதிவுபெற்றது. ஆட்சேபிக்கப்பட்டு 2,800 பேர்களின் பெயர்கள் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டது. இரண்டாவது தேர்தலின் ஆட்சேபிக்கப்பட்ட 3000 பேர்களில் 2,850 பேர்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டன.

டொனமூர் கமிசன். 5 வருட வாசகாலத்தை வாக்குரிமை வழங்க வற்புறுத்திய போதிலும், கல்வியறிவற்ற தோட்டத் தொழிலாளர்களின் விசயத்தில் வாக்குரிமை வழங்கும் விசயத்தில் பெரும்தன்மையாக நடக்க வற்புறுத்தியது. தோட்டத் தொழிலாளர்கள் விசயத்தில் கல்வி அறிவை ஒரு தகுதியாக வற்புறுத்தினல் சிறிய தொகையினரே வாக்குரிமை பெறுவார்கள் என்பதைச் சுட்டிக் காட்டினர்கள்.

(வளரும்)

அன்பன்

**பி. பெருமாள்**

அரசியல் காரியதரிசி

---

# இலட்சியப் பாதை

ஜனநாயகம் நமது இலட்சியம்: சோஷலிசம் அதற்கான பாதை, எல்லோரும் சுதந்தரமாக வாழ வேண்டும், பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வேண்டும். வறுமையும், அறியாமையும் தொலைய வேண்டும், செல்வம் எல்லா இல்லங்களிலும் கொழிக்க வேண்டும். எத்தகைய சுரண்டலும் இருக்கக் கூடாது, என்பதே ஜனநாயக இலட்சியம்.

பொருளாதார முன்னேற்றதிற்கு எப்படி வேண்டுமானலும் திட்டமிடலாம், எந்த முறையை வேண்டு மானலும் பின்பற்றலாம் என்று கூறுவதை ஒப்புக் கொள்ள முடியாது. வன்முறைகளையோ அல்லது சர்வாதிகார வழிகளையோ பின்பற்றி, மக்களுடைய உரிமைகளைப் புறக்கணித்து, பொருளாதார அபிவிருத்தியை அடைவது கண்களை விற்றுச் சித்திரம் வாங்குவதைப் போன்றது; ஜனநாயக இலட்சியத்திற்கு அது விரோதமானது.

—ஜனநாயகப் பிரச்சினைகள்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் புதியதோர் திருப்பம் வேண்டும்

— கௌரி —

மலைநாட்டு மக்களின் ஒரு நூற்றாண்டுகால சோகக் கதை இன்னும் முடிவடையப்போவதாகத் தெரியவில்லை. இந்நாட்டின் பொருளாதாரச் சுபீட்சத்திற்குப்பெருமளவில்காரணமாயிருப்பதும் உயிர்நாடியான அன்னியச் செலாவணியில் நூற்றுக்கு அறுபத்திநாலு சதவீதம் தேடிக் கொடுப்பதும் மலைநாட்டுத் தொழிலாளரின் ஒப்புயர்வற்ற அயரா உழைப்பேயென்றால் மிகையாகாது. இந்நாட்டினர் பல வருடங்களாக அனுபவிக்கும் இலவசக் கல்வி, வைத்தியச் சேவை இன்னும் பலவித சமூக சேவைகளுக்கும் அத்திவாரமாக இருக்கும். மலைநாட்டுத் தொழிலாளர் பிரதி பலனாகப் பெற்றிருப்பது என்ன? மலைநாட்டுத் தொழிலாளரின் நலனில் அக்கறை கொண்டுள்ள ஒவ்வொருவரும் இக்கேள்விக்குரிய தகுந்த பதிலை ஆராய வேண்டும்.

"நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாமலிருக்க வேண்டும்" என்பது ஒரு அறிவுரை. மலைநாட்டு மக்களின் சேவைக்குப் பிரதிபலனாக விசேஷ சலுகைகள் இலங்கை அரசாங்கம் செய்திருக்காவிடினும் பேரிடி போன்ற சட்டங்களை ஒன்றன்பின் ஒன்றாக இயற்றி அவர்களுடைய அடிப்படை உரிமைகளையாவது பறிக்காதிருக்கலாம். இந்நாட்டிற்கு சுயாட்சி கிடைத்தகாலந்தொட்டு இன்று வரை பதவி ஏற்ற ஒரு அரசாங்கமும் தோட்டத்தொழிலாளரை மனிதத் தன்மையுடன் நடத்தவில்லை. அரசாங்கத்தின் பெரும்பாலான திட்டங்கள் சுயநலத்தை அடிப்படையாகக்கொண்டு இனத்துவேஷிகளை திருப்திப்படுத்துவதற்காகச் செய்யப்பட்டவைகளாகவே இருந்துள்ளன.

மலைநாட்டுத் தொழிலாளரின் மூதாதையரை இலங்கைக்கு ஏமாற்றி அழைத்துவந்த வெள்ளைக்கார முதலாளிமாரும், பிரித்தானிய அரசாங்கமும் கோடிக் கணக்கான இலாபத்தைத் தேடிக் கொண்டு போய்விட்டன. இயற்கை அன்னை இந்நாட்டிற்கு அளித்திருக்கும் வளங்களும் தோட்டத்தொழிலாளரின் உயர்ந்த உழைப்புமே இவர்கள் ஈட்டிய இலாபத்திற்கு மூலகாரணங்கள். இவர்களைத் தவிர தேயிலைத்தூரில் மாசி இருப்பதாகத் தொழிலாளரை நம்பச் செய்த கங்காணிமார், கணக்கப்பிள்ளைகளும் ஒரு காலத்தில் தமதுபங்குக்கு அவர்களை வாட்டி வதைத்தனர். மற்றவர்கள் உயர்நிலை அடைவதற்கு ஏணியாயிருந்தவன் தோட்டத் தொழிலாளி. அவ்வேணியைப்பாவித்து உயர்ந்தவர்கள் அதை உதைத்துத்தள்ள முயலும் அநீதியை இன்று காண்கின்றோம். ஆனால் இதைச் செய்பவர்கள் தம் செய்கையால் நாட்டின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரத்தையும் அசைவு காணச்செய்கிறோம் என்பதை உணர்வதாகத் தெரியவில்லை. ஒரு வேளை நன்றாக அறிந்துவைத்துக் கொண்டுதான் இந்த நாசவேலையில் ஈடுபடுகிறார்களோ! "மகன் செத்தாலும் பரவாயில்லை. மருமகள் தாலி அறுபடவேண்டும்" என்று எண்ணிய ஒரு மாமியாரின் நினைவுதான் வருகிறது!

தோட்டத் தொழிலாயின் இன்றைய இழிவான நிலைக்கு பிரித்தானியரையும், இலங்கை அரசாங்கத்தையும் மட்டுமே காரணங்களாகக் கூறிவிட முடியாது. தொழிலாளரின் தலைவர்களென்று 1939ல் இருந்து இன்றுவரை கூறிக்கொண்டிருக்கும் சிலர் இன்றைய நிலைக்குக் காரணமாவார்கள். பிரித்தானியரின் ஈரமற்ற மனமும் இலங்கையரின் மாற்றாந்தாய் நடத்தையும் ஓரளவு உணரக் கூடியவை. பொருளாதார அரசியல் லாபத்தைக் குறிக்கோளாகக் கொண்ட அவர்களைப் பற்றி நாம் வியப்படையவேண்டியதில்லை. தலைவர்களால் தோட்டத் தொழிலாளர்கள் அடைந்திருக்கும் கஷ்டங்கள் வியப்பும், வெட்கமும் தருவதாயிருக்கின்றன

தொழிலாளரின் மேம்பாட்டிற்காக இன்றுவரை உருப்படியாக தங்களுடைய சுயநல நோக்கங்களுக்கும் பதவி ஆசைகளுக்குமே தொழிலாளர் பகடைக்காய்களாகப் பாவிக்கப் பட்டிருக்கின்றார்கள். தங்களின் தலைமைப்பதவிகளை நிரந்தரமாகப் பாதுகாக்கும் திட்டமே இவர்கள் மனதில் மேலோங்கி நிற்கின்றன! தொழிலாளரின் பிற்காலச் சந்ததியினரின் நிலையை முன்னிட்டு எந்தவிதமான ஆக்கப்பூர்வமான திட்டங்களும் இதுவரை எடுக்கப்படவில்லை. ஏழைத் தொழிலாளரின் குழந்தைகளுக்கான கல்வித்திட்டம் ஏதாவதுண்டா? மலைநாட்டு மக்கள் பரம்பரைபரம்பரையாக தொழிலாளர்களாகவே இருக்க வேண்டுமா? என்பதுதான் இந்தப்புண்ணியவான்களின் சித்தம் போலும்!

பிரஜைகள் இருந்தால் தானே அரசர்கள் வாழ முடியும், வரி வசூலிக்க முடியும். மலைநாட்டுத் தொழிலாளர்கள் தோட்டத்து அடிமை நிலையிலிருந்து விடுபட்டால் சில தலைவர்கள் கதி என்னுவது? இதனால்தான் இத் தலைவர்கள் மலையக மக்களிடையே எந்தஒரு புரட்சிகரமான திருப்பத்தையும் ஏற்படுத்தப் பயப்படுகிறார்கள். தொழிலாளர்களை என்றுமே தமக்கு "ஆமா சாமி" போடுபவர்களாக வைத்திருப்பதில் அக்கறை கொண்டுள்ளனர்.

தோட்டத் தொழிலாளர் தங்களுடைய கடமை என்னவென்று சிந்திக்கவேண்டும். சதா மற்றவர்களை நம்பி இருப்பதை விட்டுவிட்டு சுயமாகச் சிந்தித்து செயல்படும் காலம் வந்துவிட்டது தனக்காக இல்லாவிட்டாலும் தன் சந்ததியினரின் பொருட்டாவது சரியான வழியில் நடக்கவேண்டும். இந்நாட்டிலுள்ள மற்றைய தொழிலாளர்களின் நிலையுடன் தம்மை ஒப்பிட்டுப்பார்த்தாவது எழுச்சியடைய வேண்டும். ஏனைய துறைகளில் இரண்டு தலைமுறைகளுக்குமுன் தொழிலாளர்களாகவிருந்தவர்களின் பிள்ளைகள் இன்று தொழிலாளர்களாகவா இருக்கின்றனர்? சிறுகைத்தொழில் செய்பவர்களாகவோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூட ஆசிரியர்களாகவோ அல்லது சிறு வியாபாரம்செய்பவர்களாகவோ தான் இருக்இருக்கின்றனர். மலைநாட்டுத் தொழிலாளரின் சந்ததியினர் மட்டும் ஏன் தோட்டத்தொழிலாளர்களாகவே இருந்து அல்லல்பட வேண்டும்?

நாட்டில் உருவாகிக்கொண்டிருக்கும் பொருளாதாரநெருக்கடி இன்னும் மோசமடையலாம். அப்போது மிகப்பயங்கரமாகப் பாதிக்கப்படப் போவது மலையகத் தொழிலாளர்கள் என்பதில் சந்தேகமில்லை. அரசாங்கம் கொண்டுவந்துள்ள காணி உச்சவரம்பு-சுவீகரிப்புச் சட்டங்கள் தோட்டத் தொழிலாளருக்குப் பலத்த அடியாகும். இனி உருவாகும் சட்டதிட்டங்கள் அவர்கள் நிலையை மேலும் மோசமடையச் செய்யும். மலைநாட்டு மக்கள் தோட்டங்களில் அடிமைகளாக வாழ்ந்து தம் சந்ததியினரை படுபாதாளத்தில் தள்ளிவிடக் காரணமாகக் கூடாது

தொழிலாளர்கள் விவசாயம், சிறுகைத்தொழில், சிறு அளவில் வியாபாரம் முதலியவற்றில் ஈடுபடமுயலவேண்டும் என்ற முக்கிய குறிக்கோளுடன் இயங்கினால் தான் வருங்கால சுபீட்சத்திற்கும், சுயமரியாதைக்கும் வழிவகுக்கலாம். நாம் என்றுமே தலையாட்டிபொம்மைகளல்ல, மற்றவர்கள் நினைத்தபடி ஆட்டிவைக்க என்பதை உறுதியுடன் தெளிவுபடுத்த வேண்டும். இதற்கு அடிப்படையாகச் செய்யவேண்டிய முதல் வேலை பரம்பரையாக தோட்டத்தில் இருக்கும் அடிமை நிலையை உதறித் தள்ளிவிட்டு மனோதைரியத்துடன் வேறு வேலைகளில் ஈடுபடுவதேயாம். மலைநாட்டு இளைஞர்களுக்கு இவ் விஷயத்தில் முக்கிய பங்குண்டு. சிறியளவில் மன்றங்கள் கூட்டுறவுப் பண்ணைகள் முதலியவற்றைத் தொடங்கும் முயற்சிகளில் உடனடியாக அவர்கள் ஈடுபட வேண்டும்.

மலையக மக்கள் மற்றவர்களுக்காக வாழ்ந்தது போதும், இனியாவது தம் சொந்த முன்னேற்றத்திற்கும், மரியாதைக்கும் பாடுபடட்டும். இப் புத்தாண்டு இவர்களுக்கு ஒருபுதிய வழியைக் காட்டுவதாக அமையட்டும்.

## வாசகர்களுக்கு

தொழிற் சங்கங்களுக்கும் அரசியல் கட்சிகளுக்குமுள்ள வேறுபாடுகளைப் பற்றி அடுத்த இதழில் விளக்கம் ஒன்றை கட்டுரை வடிவில் அளிக்கவிருக்கின்றோம்.

இம்முறை இடம் போதாமையின் காரணமாக "கேள்வி பதில்" வெளிவரவில்லை, அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும். வழமை போல் "கேள்வி பதிலை" தபால் அட்டையில் எழுதி அனுப்பவும்.

அடுத்த இதழ் தொடக்கம் "திண்ணை" பகுதி இடம் பெறும் என்பதையும் வாசகர்களுக்கு அறிய தருகிறோம்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் நிரந்தரமற்றதும் நிச்சயமற்றதுமாக நீடித்து விட்டது

# மலையகப் பிரச்சினைகள் யாவை?

— வி. கே. வெள்ளையன் —

( 22. 12. 1969 )

நாள் சம்பளம், வாரச்சம்பளம், மாதச்சம்பளம் என்பவைகளும் சம்பளக் கொள்கைகளில் சேர்ந்தவை. நாள் சம்பளம் அன்றாட வேலை செய்யும் தொழிலாளர்கட்கு அன்றாடக் கூலி கொடுக்கும் கொள்கையைக்கொண்டது. வேலைசெய்த நாட்களுக்குக் கூலி கிடைக்கும். வேலைசெய்யாத நாட்களுக்கு கூலி கிடைக்காது. வேலை கொடுக்கும் நாட்களில் மாத்திரமே வேலை செய்யும் வாய்ப்பும் கூலி வாங்கும் வாய்ப்பும் உண்டு. நாள் சம்பளம் ஒரு தற்காலிகத் தொழில் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகச் சம்பளம் பெறும் முறையைத் தழுவியதாகும். நாள் சம்பளத்தை கூலி எனக் குறிப்பிடும் பழக்கம் பண்டைக் காலத்துச் சரித்திரத் தொடர்புள்ளது. ஆதிகாலத்துக் கொள்கை அடிப்படையில் கொடுத்து வருவது. முற்காலத்தில் குறிப்பிட்ட வேலையைச் செய்து முடித்த பின் கூலி கொடுக்கப்படும். கொடுத்த வேலைக்கும் அளவு கிடையாது, கொடுத்த கூலிக்கும் அளவு கிடையாது. இக்காலத்து "கண்ட்ராக்ட்" வேலைக்கு ஒப்பிடலாம். வேலையையும் கூலியையும் ஒப்புக்கொண்டே ஆக வேண்டும். வேலை கொடுப்பவர் இட்டது சட்டம். பட்டினி கிடப்பதற்குப்பதிலாகக் கொடுத்த வேலையையும் கொடுத்த கூலியையும் ஏற்றுக் கொண்டு உழைப்பதே ஏழைகளின் கடனாக இருந்தது. வேலையையும் கூலியையும் ஏற்றுக்கொள்ளா விட்டால் பட்டினிக்குப் பலியாக வேண்டும். ஏச்சுக்கும் பேச்சுக்கும் அல்லது உதைக்கும் அடிக்கும் ஆளாக வேண்டும். செல்வந்தர்கட்கு ஏழைகள் அடிமையாக இருந்த காலத்தை ஆண்டை அடிமை காலமென குறிப்பிடப்படுகிறது. ஏழைகள் செல்வந்தர்களை அண்டிப்பிழைத்தனர். அந்தப் பண்டைக்காலத்துப் பழக்கமே மலையக மக்களையும் இந்தயாவிலிருந்து இலங்கைக்குத் தொடர்ந்து வந்து ஒரு தொற்று வியாதியைப் போல் தொற்றிக்கொண்டு நிலைத்து விட்டது. நாள் சம்பளம் தோட்டத் தொழிலாளர்கட்கு நிச்சயமற்ற வருமானமாக ஆக்கப்பட்டுள்ளது. அதுவே அவர்களை ஏமாற்ற ஏதுவாக அமைந்துவிட்டது.

தோட்டத் தொழிலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் நிரந்தரமாக வேலைசெய்ய வேண்டியவர்கள். தோட்டத் தொழில்களும் நிரந்தரமானவை தொழில் ஒப்பந்தமும் சட்ட பாதுகாப்புப் பெற்ற நிரந்தர மான ஒப்பந்தம். தொழில்ஒப் பந்தம். எழுத்துமூலம் கொடுக் கும் பழக்கத்திற்கு இன்னும் வரவில்லை. எழுத்துமூலம் ஒப் பந்தம் கொடுக்கப்படுமானல் இன்று தொழிலாளர் எத்தனை வருடம் ஒரே தோட்டத்தில் உழைத்தார்கள் என்பதை நிரூ பிக்க முடியும். எழுத்து மூலம் ஒப்பந்தம் இல்லாததால் சேவை காலப் பணத்திலும் ஒய்வுகாலப் பணத்திலும் ஏமாற்றப்படுகி ருர்கள். தொழில் ஒப்பந்தச் சட்டப்படி தொழிலாளர்கட்கு மாதச் சம்பள தொழிலாளர் கட்கும் ஒரே சட்டமாகும்.

தொழிலாளர்களை வேலைக்கு இஷ்டம்போல் அமர்த்துவதும் தன்னிஷ்டம் போல் தொழிலா ளர்களை வேலையிலிருந்து நீக்குவ தும் முதலாளியின் தனி உரிமை யாக இருந்து வந்தது. நீதிமன் றங்களும் முதலாளிகளின் யதேச்சாதிகார வேலைநீக்க உரி மையை இன்று கட்டுப்படுத்தி யுள்ளன. வேலை நீக்கம் செய் யப்பட்ட தொழிலாளி தொழில் மன்றத்திற்குப் போய் தன்னை வேலைநீக்கம் செய்தது நியாய மற்றது என்று வாதாடித் தொழிலில் திரும்பவும் வேலை செய்யும் வாய்ப்பு உண்டு.

## நாட் சம்பள முறை மறைக
## மாதச் சம்பள முறை வருக!

ஒரு மாதம் "நோட்டீஸ்" கொடுத்து வேலைநீக்கம் அல்லது "டிஸ்மிஸ்" செய்யவேண்டும். தொழிலாளியும் ஒரு மாத "நோட்டீஸ்" கொடுத்து ஒப் பந்தத்திலிருந்து விடுதலைப்பெற் றுத் தொழிலிருந்து வெளி யேற வேண்டும். முதலாளியோ அல்லது தொழிலாளியோ ஒரு மாதம் நோட்டீஸ் கொடுத்து ஒப்பந்தத்தை ரத்துச் செய்யா விட்டால் சட்டப்படி ஒப்பந் தம் மாதாமாதம் நீடித்துக் கொண்டே போகும். ஒப்பந்தம் நீடிப்பதால் தொழிலாளர்கள் நிரந்தரத்தொழிலாளர்களாகின் றனர். தொழில் ஒப்பந்தச் சட் டம் இலங்கையிலுள்ள எல் லாத் தொழிலாளர்கட்கும் நாள் சம்பளத் தொழிலாளர்கட்கும் ஆகவே தொழில் மன்றங்களின் தீர்ப்பால் தொழிலாளர்கள் நியாயமின்றி வேலை நீக்கம்செய் யப்படுவதிலிருந்து பாதுகாக்கப் படுகின்றனர். தொழிலாளர் கள் வேலைநீக்கத்திலிருந்துபாது காக்கப்படுகின்றனர். ஆனல் அவர்களின் சம்பளம் பாதுகாக் கப்படவில்லை. பறிக்கப்படுகின் றது. தோட்டத் தொழிலாளர் களின் சம்பளம் பாதுகாக்கப் படாமலிருப்பது விந்தையும் விசித்திரமும் நிறைந்தது. தொழி லாளர்கள் அடிக்கடி தண்ட னைக்குள் அகப்பட்டனர். வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். திடீர் திடீரென வேலை நிறுத் தங்கள் ஏற்பட்டன. வேலை நிறுத்தங்கள் பரவின. நீடித்தன. அடிக்கடி ஏற்படும் வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தத்தால் உற்பத்தி பாதிக்கப்பட்டது. உற்பத்தியை பாதுகாக்க வேலைநிறுத்தத்தை கட்டுப்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. வேலை நிறுத்தத்தைக் கட்டுப்படுத்த வேலை நீக்கம் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தொழில் மன்றங்களும், தொழில் நீதிமன்றங்களும் சட்டத்தால் நியமிக்கப்பட்டன. வேலை நீக்கத்திற்காக வேலைநிறுத்தம் செய்யப்படுவது கட்டுப்படுத்தப்பட்டு விட்டது. ஆகவே உற்பத்தியும் பாதுகாக்கப் பட்டு விட்டது ஆனால் உற்பத்தியைப் பெருக்க உழைப்பைக் கொடுக்கும் உழைப்பாளிகளின் உயிரையும் உடலையும் காப்பாற்ற சட்டம் மறுக்கின்றது. தொழிலாளர்களின் உயிரையும் உடலையும் அவர்கட்குக் கிடைக்கும் சம்பளம் தான் காப்பாற்ற முடியும் உற்பத்தி உயர்வதால் தொழிலாளர்களைப் பற்றி யாருக்கும் அக்கறையில்லை. வேலை நீக்கத்தைக் கட்டுப்படுத்தும் சக்தி வேலை நிறுத்தத்திற்கு இருக்குமாயின் சம்பளத்தைப்பாதுகாக்கும் சக்தி வேலை நிறுத்தத்திற்கு இருக்கத்தான் செய்கின்றது. சம்பளப் போராட்டம் இல்லாததினால்சம்பளத்தை பாதுகாக்கவும் சம்பளத்தை உயர்த்தவும் சூழ் நிலை ஏற்படவில்லை. தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் நிரந்தரமற்றது. நிச்சயமற்றதுமாக நீடித்துவிட்டது.

தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளம் நிரந்தரமான வருமானமாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடும் தொழிலாளர்கள் நிரந்தரமாக ஒவ்வொருநாளும் வேலைக்குப் போகத் தூண்டுதலாக இருக்கவேண்டுமென்ற நோக்கத்தோடும் சம்பளச் சட்டத் இயற்றப்பட்டது. சட்டம் குறிப்பிடுவதாவது:-

(1) வாரத்திற்கு ஆறு நாட்கள் வேலைகொடுக்க வேண்டும்.

(2) வேலை கொடுக்காத நாட்களுக்குச்சம்பளம்கொடுக்க வேண்டும்.

(3) வேலை செய்த நாட்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும்.

ஆனால் தோட்டங்களில் நடைமுறையில் நடப்பதென்ன?

(1) வாரத்திற்கு ஆறு நாட்கள் வேலை கிடைப்பதில்லை.

(2) வேலை கொடுக்காதநாட்களுக்குச் சம்பளமில்லை.

(3) வேலைசெய்த நாட்களுக்கும் ஒழுங்காகச் சம்பளம் கொடுப்பதில்லை.

ஆறுநாள் வேலை தோட்டங்களில் கிடைப்பதில்லை என்ற பிரச்சினை எங்கும் பேசப்படுகிறது. இங்கும், அங்கும் வேலை நாளைக்கூட்ட அரைகுறைவேலை நிறுத்தங்கள் ஏற்படுகின்றன. பத்திரிகைகளில் விளம்பரம் பிரமாதமாகக் காணப்படும். மேடைகளில் ஆவேசமாகக் கூலிக்கு மாரடிப்பவர்களைப் போல் கத்தப்படும். ஆனால் இரகசியமாக வேலை இல்லாத காலத்தில் ஏன் இந்த வேலை நிறுத்தம் என்ற கேள்வி எழுப்பப்படும். பெண் தொழிலாளர்கட்கு ஒழுங்காக வேலைகிடைக்கும் பொழுது அதை ஏன் கெடுக்க வேண்டும் என்ற கதை பரவும், ஆண்கள் மாட்டுக்குப் புல்அறுக்கலாம்; காய்கறிதோட்டங்களில் பாடுபடலாம் என்ற பாட்டுப் பரவலாகக் கேட்கப்படும். வேலைகொடுக்காத நாட்களுக்குச் சம்பளம் கொடுக்கவில்லையே என்ற பிரச்சினை

யாருக்கும் தெரியாது. யாரும் பேசுவதும் கிடையாது, வருமானம் குறைகிறது என்ற எண்ணம் யார் மனதிலும் தென்படுவதில்லை வேலையில்லை, சம்பளமில்லை என்றே எல்லோரும் பேசுவார்கள். வேலை செய்யாவிட்டால் சம்பளம் எப்படிக் கிடைக்கும் என்ற கேள்வி கிளப்பப்படும்.

சாமான்கள் கடனுக்குக் கொடுக்கக் கடைகள் காத்துக் கொண்டு இருக்கின்றன. பணம் கடனுக்குக் கொடுக்க வட்டிக் கடைகள்உண்டு. அவசர நேரங்களில் சாமான்களும் பணமும் கிடைப்பதால் குறைந்த வருமானத்தைப்பற்றி எண்ணவும் பேசவும் யாரும் கிடையாது மலையக மக்கள் நிரந்தரக் கடனில் வீழ்ந்துவிட்டனர். தோட்டத் தொழிலாளர்கள் முக்கால் வாசிக்கு மேலானோர் கடனாளிகளாகவே காலத்தை கடத்துகின்றனர். கடன் கொடுத்தவர்கள் வேலை நிறுத்தம் செய்தால் உனக்கு சம்பளம் கிடைக்காது கடனை எப்படி கட்டமுடியும்? என்ற கேள்வியை எழுப்புகின்றனர், கடனுக்குப்பயந்தும் சம்பளப் போராட்டம் ஒழிந்து கொள்கிறது.

வேலை செய்த நாட்களில் வேலை குறைந்தால் சம்பளமில்லை. பாதிவேலை செய்தால் பாதிச் சம்பளம் கிடைக்கும். வேலைக் கணக்கை தாமாகக் கூட்டிவிட்டு வேலை குறைந்துவிட்டது என்ற குற்றத்தைத் தொழிலாளர்கள் மேல் சுமத்துகின்றனர். குற்றத்திற்குத் தண்டனை அரைச் சம்பளம், அல்லது சம்பளம் அறவே இல்லாமல் போய்விடும். வேலைக்குத் தொழிலாளர்கள் அதிகாலையில் ஆஜராக வேண்டும். அதிகாரியின் கடிகாரம் குறிப்பிடும் நேரமே சரியான மணிக்கணக்கு என்று வாதாடுவார்கள் வேலை இல்லாத சமயங்களில் சுணங்கி வந்ததால் வேலையில்லை என்று அனுப்பிவிடுவார்கள். வேலையில் குற்றம் குறை இருந்தால் இன்று உனக்கு வேலை இல்லை என்று வீட்டுக்கு அனுப்பிவிடுவார்கள். வேலை செய்தும் வேலைக்குப் போயும் வேலை இல்லை என்ற பிரச்சினை ஒவ்வொருநாளும் எழுந்துகொண்டேயிருக்கின்றது. தோட்டத் தொழிலாளர்கட்கோ வேலையில்லாதது தான் பிரச்சினையாகத் தோன்றுமே தவிர சம்பளமில்லாமல் போய்விடுகிறதே என்ற நிலை தெரியாது. வேலையில்லை என்பதெல்லாம் சம்பளப் பிரச்சினையைச் சார்ந்தது என்ற விபரம் தொழிலாளர்கள் சரியாகத் தெரிந்துகொள்வதில்லை. நாள் சம்பளத்தில் ஏற்படும் இன்னல்கள் தகராறுகள் என்று புரிந்துகொள்வதுமில்லை. நாள் சம்பளம் தொழிலாளர்கட்கு தற்காலிகச் சம்பளமாகவே இருக்கின்றது ஆகவே நாள் சம்பள முறை முதலில் மறைய வேண்டும். பிரச்சினைகள் தீர உழைப்பாளிகளின் உயிரையும் உடலையும் காப்பாற்ற மாதச் சம்பளம்தான் உகந்தது. ஏற்றது; பொருத்தமானது; சட்டப்படி கிடைக்க வேண்டியதுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல வார்த்தை

(நிதிச் செயலாளர் கே. வி. வெள்ளச்சாமி)

ஒரு தனி மனிதனுக்கும் சரி அல்லது ஒரு குடும்பஸ்தனுக்கும் சரி அல்லது ஒரு நிறுவனத்திற்கும் சரி "முதல்" (பணம்) அத்தியாவசியமானது. முதலை சம்பாதிக்க மனிதன் பல தொழில்களை செய்கின்றான். திருடுகின்றான். பொய் சொல்லுகின்றான். பிச்சை எடுக்கின்றான் அடிமையாக உழைக்கின்றான். உடல் நோகாமலும் சம்பாதிக்கின்றான். நேர்மையாக உழைத்துச் சம்பாதிக்கிறவனின் "முதல்" தான் நிலையானது. நிர்மலமானது. மதிப்பு மிக்கது.

நல்லவர், தீயவர் என்று பாராது எல்லோர் கையிலும் சேரும் முதல், இன்று ஒருவர் கையிலும், நாளை இன்னொருவர் கையிலும் சக்கரம் போல் சுழன்று காலக்கிரமத்தில் தேய்ந்து, உருமாறி ஈற்றில் செல்லாக்காசாக மாறி விடுகின்றது. பணம் இல்லாத மனிதனும் இதே போன்ற செல்லாக்காசு தான்.

மனிதன் தனது நலனுக்காக ஏற்படுத்திய பணம், இன்று மனிதனையே ஆட்டிவைக்கின்றது. தாய், தந்தையரின் உறவைக் கூட பணம் பிரித்து விடும். பணம் மகத்தான சக்தியை உடையது. எனவே எப்படியும் சம்பாதிக்கலாம் என்ற நோக்கை மறந்து, நல்ல வழியில் "முதல்" சம்பாதிக்க வேண்டும்.

---

# இந்து சமுத்திரம்

இந்து சமுத்திரம், வடக்கிலிருந்து தெற்காக 6,500 மைல்கள் நீண்டும், கிழக்கு மேற்காக 6000 மைல்கள் அகன்றும் முழுமையாக 29,340,000 சதுரமைல் பரப்புடையது.

தென் கிழக்காசியாவிலிருந்து மேற்கு ஆபிரிக்கா வரையும், நன்னம்பிக்கை முனை தொட்டு தெற்கு அவுஸ்திரெலியாவின் கெப்லிவின் வரையும் உள்ளது. உலகக்கடல்களின் மொத்த நீர் பரப்பில் மூன்றாவது ஸ்தானத்தைப் பெறுகிறது.

நாற்பது நாடுகளையும், நூறு கோடி மக்கள் வாழும் நிலப்பரப்பும் இக்கடலின் கரையாக உள்ளது.

மேற்கு உலகுக்கும், கிழக்கு உலகுக்கும் தொடர்பை ஏற்படுத்தும் பிரதான கடல் மார்க்கங்கள் இச் சமுத்திரத்தின் ஊடாக செல்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org